Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, SEPTEMBER 16, 2021

வியாழக்கிழமை செப்டெம்பர் 16, 2021 | ஒளி: 07 கதிர்: 102 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | Free

## கைதிகள் தினத்தில் அராஜகம்: தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளிடச் செய்து, சுடுவதாக மிரட்டல்;

# ஓர் இராஜாங்கத்தை துறந்தார் லொஹான்

மதுபோதையில், தனது சகாக்களுடன் அநுராதபுர சிறைச்சாலைக்குச் சென்று, அங்கிருந்த தமிழ் அரசியல் கைதிகளை அழைத்து, அதிலிருவரை முழந்தாளிடச் செய்து, தனது கைத்துப்பாக்கியை எடுத்து, சுட்டுத்தள்ளிவிடுவேன் என அச்சுறுத்தியதாகக் குற்றச்சாட்டப்பட்ட இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் பதவியை இராஜினாமா செய்துகொண்டார்.



சிறைச்சாலைக்குள் அத்துமீறி நுழைந்தமை தொடர்பில் இவருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட இரண்டாவது குற்றச்சாட்டு இதுவாகும். கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர், வெலிக்கடை சிறைச்சாலைக்குள் அத்துமீறி நுழைய முயன்றுள்ளார். எனினும், அங்கிருந்த அதிகாரிகளால் லொஹான் ரத்வத்த திருப்பி அனுப்பப்பட்டுவிட்டார்.

அநுராதபுரம் சம்பவத்துக்கு கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. அவரை பதவியிலிருந்து விலக்கி, கைது செய்யுமாறு பல தரப்புகளிடமிருந்தும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன.

இந்நிலையில், இத்தாலியிலிருந்து தொலைபேசியூடாக தொடர்பு கொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பதவியை இராஜினாமா செய்யுமாறு கட்டளையிட்டார்.

விசாரணைகள் நிறைவடையும் வரையிலும் பதவியை இராஜினாமா செய்யுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பணித்திருந்தார்.

தொடர்ச்சி P2

# கைது செய்க



சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு பதவியிலிருந்து லொஹான் ரத்வத்த பதவி விலகியமை மாத்திரம் போதாது எனத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் அவரைக் கைது செய்யவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ள அவர், லொஹான் ரத்வத்தவை கைது செய்து, முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ள அவர், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய அனைவர் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அப்பதிவின் ஊடாகக் கோரியுள்ளார்.



புதிய ஆளுநர் கப்ரால்

# கடிதத்தைப் பெற்று கடமைகளை ஏற்றார்

மத்திய வங்கி ஆளுநராக நியமிக்கப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சரும் முன்னாள் மத்திய வங்கி ஆளுநருமான அஜித் நிவாட் கப்ராலுக்கான நியமனக் கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ரா ராஜபக்ஷ நேற்று (15) வழங்கி வைத்தார். மத்திய வங்கி ஆளுநராக பதவியில் இருந்த டப்ளியூ டி லக்ஷ்மன் ஓய்வு பெற்றதை அடுத்தே, கப்ரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர், இலங்கை மத்திய வங்கியின் 16ஆவது ஆளுநர் ஆவார். அவர், தனது கடமைகளை நேற்றைய தினமே ஏற்றுக்கொண்டார்.

(படம்: பிரதீப் பத்திரண)

## அ'புரம் விவகாரம்: அரசியல்வாதி ஒருவர் நடந்து கொண்டது

# இதுவே முதல் முறை

■ என்.ராஜ்

அநுராதபுரம் சிறைச்சாலையில் இடம்பெற்ற சம்பவமானது கண்டிக்கப்பட வேண்டிய விடயமெனத் தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், இராஜாங்க அமைச்சர் ஒருவர் நேரடியாகச் சென்று, இப்படியான வன்முறைகளில் ஈடுபடுவது



என்பது இதுவே முதல் தடவையாகும் எனவும் கூறினார்.

தொடர்ச்சி P2

## ஐ.நாவில் முன்வைக்கப்பட்டதில்

# 90 சதவீதம் யதார்த்த பிரச்சினை

ஜனநாயகம் ஆபத்துக்குள்ளான நாடுகளின் பட்டியலில் இலங்கையும் துரதிர்ஷ்டவசமாக உள்ளடங்கியுள்ளது எனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கர், அதில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் 90 சதவீதமானவை நிகழ்கால விடயங்களாகும் என்றார்.

மனித உரிமைகள் தொடர்பில், ஐக்கிய நாடுகள் சபையின் ஆணையாளர் முன்வைத்த அறிக்கைக்கு அமைய, உலகின் ஜனநாயகம் ஆபத்துக்குள்ளாகியுள்ள நாடுகள் பட்டியலில் எமது



தொடர்ச்சி P2

## அனுமதித்தோருக்கு எதிராகவும்

# நடவடிக்கை எடுக்கவும்



■ என்.ராஜ்

துப்பாக்கியுடன் சிறைக்குச் செல்ல அனுமதித்தோருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# கறுப்புக் கொடியின் பாதிப்பு நாட்டுக்கே ஏற்படும்



வெளிநாடுகளுக்குச் சென்று, நாட்டுத் தலைவர்களை விமர்சிப்பது, கறுப்பு கொடி ஏற்றுவது என்பவற்றின் பாதிப்பு, அரசாங்கத்துக்கோ அரசியல் கட்சிகளுக்கோ ஏற்படாது எனத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், இதன் பாதிப்பு நாட்டுக்கே ஏற்படும் என்றார்.

தொடர்ச்சி P2

# 4 மாத சிசு மரணம்



■ செந்தூரன் பிரதீபன்

இருதய நோயால் பீடிக்கப்பட்ட நிலையில், மூச்சு திணறல் காரணமாக உயிரிழந்த 4 மாதங்களேயான சிசு ஒன்றுக்கு, கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இளவாலை, சென்ஜேம்ஸ் பகுதியைச்

தொடர்ச்சி P2

## வைத்தியசாலையின் ஊழியர் மீது

# சுடுநீரை ஊற்றிய இராணுவ வீரர்

கராப்பிடிய வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலையில் வைத்து, இராணுவ வீரர் ஒருவருக்கும், வைத்தியசாலையின் ஊழியர் ஒருவருக்கும் ஏற்பட்ட பிரச்சினையில், ஊழியரின் முகத்தில் இராணுவ வீரர், சுடுநீரை ஊற்றிய சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

தொடர்ச்சி P2

# 11,605 பேர் குணம்

கொரோனா தொற்றில் இருந்து 11,605 பேர், நேற்று (15) குணமடைந்துள்ளனர். நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 4,27,254 ஆக அதிகரித்துள்ளது.

தொற்றுக்குள்ளாகிய 55,288 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். நாட்டில் இதுவரை 4,94,109 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

தொற்றுக்குள்ளான 11,567 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

# கறுப்பு பூஞ்சை தொற்றல்ல

கொழும்பு, குருநாகல், இரத்தினபுரி ஆகிய பிரதேசங்களில் கொரோனா தொற்றாளர்களிடையே கறுப்பு பூஞ்சை நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என, சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார மேம்பாட்டு அலுவலகத்தில் நேற்று (15) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் இத தொடர்பில் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், தற்போது கறுப்பு பூஞ்சை நோய் ஏற்பட்டவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலை,

தொடர்ச்சி P2

# ரணில், பாலித்தவுக்கு எதிராக தடையுத்தரவு

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க எம்.பி, கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார ஆகியோருக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று (15) தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து நீக்கப்பட்ட பத்தேகம பிரதேச சபை உறுப்பினர் மஞ்சுள வசந்த உள்ளிட்ட 21 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு பதிலாக, வேறு சிலர் பெயரிடப்படுவதை தடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த தேர்தல் காலத்தில் ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவு தெரிவித்ததாக குற்றம் சுமத்தி, ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரில் தாம் கட்சியில் இருந்து நீக்கப்பட்டிருந்தோம்.

தொடர்ச்சி P2

# கைதிகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும்



கைதிகளை தவறாக நடத்துவதை கண்டித்துள்ள இலங்கையில் உள்ள ஐக்கிய நாடுகளின் அலுவலகம், கைதிகளின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறும் வலியுறுத்தியுள்ளது.

மண்டேலா விதிகளின்படி, கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பது அரசின் கடமை என்று, இலங்கையில் உள்ள ஐ.நா வதிவிட ஒருங்கிணைப்பாளர் ஹனா சிங்கர் ஹம்டி கூறினார்.

சிறைச்சாலை சீர்திருத்தம் மற்றும் போதை மறுவாழ்வு தொடர்பான எங்கள் பணிகளில், சிறையில் உள்ள அனைவரின் உரிமைகளையும் நிலைநாட்டும் திறனை வலுப்படுத்த ஐ.நாவும் இலங்கையும் செயல்படுகின்றன. கைதிகளை தவறாக நடத்தப்படுவதை கண்டிக்கிறது என்றும் டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

பதவியிலிருந்து நீக்கவும்



வக்கிர மனது இதுவா?



அராஜக நிலைக்கு ஓர் எடுத்துக்காட்டு



கூட்டமைப்பு கண்டனம்

முழுச் செய்தி P7

# தமிழ் இளைஞன் கைது

மலசல கூடத்துக்குள் கைக்குண்டு

நாராஹேன்பிட்டி தனியார் வைத்தியசாலையின் மலசல கூடத்திலிருந்து கைப்பற்றப்பட்ட கைக்குண்டு தொடர்பில், திருகோணமலை, உப்புவெளி பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

வைத்தியசாலை வளாகத்தில் பொருத்தப்பட்டிருக்கும் சி.சி.ரி.வி கமெராக்களின் காட்சிகளை அடிப்படையாக வைத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலை அடுத்தே, இவ்விளைஞனை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தக் கைக்குண்டின் பாதுகாப்பு ஆணி கழற்றப்பட்டுள்ளது. ஆணிக்குப் பதிலாக நுளம்பு சுருளொன்றை இணைத்து, வெடிக்கும் வகையில் இருந்துள்ளது

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஓர் இராஜாங்கத்தை துறந்தார் லொஹான்

வெலிக்கடை, அநுராதபுரம் ஆகிய சிறைச்சாலைகளில் தன்னால் மேற்கொள்ளப்பட்ட சம்பவங்களுக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு, சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு விவகார இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, தனது அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்தார் என குறிப்பிட்டுள்ளது.

அவர் தனது சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு விவகார இராஜாங்க அமைச்சர் பதவியை மட்டும் இராஜினாமா செய்தால் போதாது; ஏனைய இராஜாங்க அமைச்சுப் பதவிகளையும் அவர் இராஜினாமா செய்யவேண்டும். அவரை கைது செய்யவும் வேண்டுமென பல்வேறு தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர்.

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு விவகார இராஜாங்க அமைச்சர் பதவியைத் துறந்த லொஹான் ரத்வத்த வசம், இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சு பொறுப்புகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கறுப்பு பூஞ்சை தொற்றல்ல

குருநாகல், இரத்தினபுரி ஆகிய இரத்தினபுரி ஆகிய பிரதேசங்களில் பல வைத்தியசாலைகளில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நோய் பாதிக்கும் இடங்களை வைத்தே, இந்த நோயின் அறிகுறிகள் தீர்மானிக்கப்படுவதாகத் தெரிவித்த அவர், இந்த நோய் தோல், மூக்கு, மூளையை அண்மித்த பகுதி, கண், காதை அணிமித்த பகுதி, சிறுநீரகம், சரீரத்தின் உட்புற பிரதேசங்கள் உள்ளிட்ட எந்தவோர் இடத்திலும் ஏற்படலாம்.

இதன் அடிப்படை தொற்று பங்கசாகும். இது சுற்றாடலிலேயே உள்ளது. இந்த நோய் சீக்கிரமாக எவருக்கும் ஏற்படாது. உடலில் நோய் எதிர்ப்பு சக்தி மிகமிகக் குறைவாக உள்ளவர்களுகே இந்த நோய் ஏற்படும் என்றார்.

கட்டுப்படுத்த முடியாத தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டு உள்ளவர்களுக்கும் பல்வேறு நோய்களுக்கான மருந்துகளை உட்கொண்டவர்களுக்கும் இந்த நோய் தொற்றுவதற்கு வாய்ப்புள்ளது என தெரிவித்த அவர், இது ஒருவரிடம் இருந்து மற்றொருவருக்கு பரவும் நோய் அல்ல என்றார்.

சுற்றாடலிலிருந்தே இந்த நோய் பரவுகிறது. இதன் பாதிப்பு, நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து பலவீனமாக இருப்பவர்களுக்கே அதிகம் உள்ளது என்றார்.

எனவே இந்த நோய் தொற்றுக்கு உள்ளாகும் நோயாளிகளை அடையாளம் காண்பது மிகவும் அவசியமாகும். விசேடமாக சுற்றாடலில் உக்கும் கழிவுகள் உள்ளிட்ட இடங்களிலிருந்து தான் வளிமண்டலத்துக்கு இதன் பங்கசு சேர்கின்றது.

எனவே, இவ்வாறான நோய்க்குள்ளாகுபவர்கள் தமக்கு இந்த நோயின் ஓர் அறிகுறியாவது ஏற்பட்டவுடன் விரைவில் சுகாதார ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வது அவசியம் என்றார்.

# இதுவே முதல் முறை

யாழ்ப்பாணத்தில் நேற்று (15) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், சிறைச்சாலைக்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சரே ஒரு துப்பாக்கியை சிறைச்சாலைக்குள் எடுத்துச் சென்று அங்கு இருக்கக்கூடிய தமிழ் கைதிகளை விரட்டுவது என்பது, மிகப் பாரதூரமான சம்பவமாகும் என்றார்.

இது சம்பந்தமாக அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தவறினால், இது போன்ற நிகழ்வுகள் வருங்காலத்தில் பயங்கரமான செயற்பாடுகளை ஏற்படுத்தி விடும் என்பதை அரசாங்கம் உணர்ந்து கொள்ள வேண்டும் எனவும், அவர் கூறினார்.

# 90 சதவீதம் யதார்த்த பிரச்சினை

நாடும் உள்ளடங்கியுள்ளது என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (15) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், 2015ஆம் ஆண்டுக்கு முன்னர், இந்த முகாமினரின் ஆட்சிக் காலத்தில் இலங்கை மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் தொடர்பான பிரச்சினையை மு ஐ.நா வில் ன்வைக்கும் போது, அது தமிழ் மக்கள் தொடர்பான பிரச்சினை என அடையாளப்படுத்தினர்.

பின்னர் தேசாபக்தி தொடர்பில் கதைத்து தெற்கு மக்களிடம் அதற்கு எதிரான நிலைப்பாடொன்றை தோற்றுவிக்க முயற்சித்தனர். ஆனால் இன்று அவர்களால் அதனை செய்யும் வாய்ப்பு இல்லாமற் போயுள்ளது..

ஐ.நாவில் தற்போது முன்வைக்கப்படும் பிரச்சினைகள், இலங்கையில் இடம்பெற்ற சிவில் யுத்தத்துடன் தொடர்புடைய பிரச்சினை அல்ல. 90 சதவீதமானவை நாட்டில் தற்போது இடம்பெறும் பிரச்சினைகளுடன் தொடர்புடையது என்றார்.

எமது நாட்டு பிரஜைகளின் உரிமைகளை பாதுகாக்க ஐக்கிய நாடுகள் சபையோ அல்லது ஆணையாளரோ தலையிட்டால் அது எமது நாட்டுக்கு கௌரவமான செயல் அல்ல. அது அகௌரவத்தை ஏற்படுத்தும் செயல் என்றார்.

இன்று இத்தாலியில் நமது நாட்டவர்கள் கறுப்புகொடியை ஏற்றி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர். எனவே எம்மவர்களை அவ்வாறான நிலைக்கு இந்த அரசாங்கமே தள்ளுகின்றது என்றார்.

# நடவடிக்கை எடுக்கவும்



கல்வியங்காட்டில் உள்ள அவரது இல்லத்தில், நேற்று (15) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், ஓர் இராஜாங்க அமைச்சர் சிறைச்சாலைக்குள் துப்பாக்கியுடன் செல்வதை சிறைச்சாலை அதிகாரிகள் எவ்வாறு ஏற்றுக் கொண்டார்கள் என கேள்வியெழுப்பினார்.

அதிகாரிகளாக இருந்தாலும் சரி, சிறைச்சாலைக்குள் அங்கிகாரம் அளிக்கப்பட்டோரைத் தவிர, அரசியல்வாதிகளோ எந்தவோர் அதிகாரியோ துப்பாக்கியுடன் சிறைச்சாலைக்குள் நுழைய அனுமதித்தது தவறாகும்.

சிறைச்சாலைகள் விருந்தினர் விடுதி அல்ல எனத் தெரிவித்த அவர், துப்பாக்கியுடன் சிறைச்சாலைக்குச் சென்ற இராஜாங்க அமைச்சர் தனியாக செல்லாது, தனது நண்பர்களுடன் சென்று இருக்கின்றார் எனவும் கூறினார்.

'வெறுமனே அநுராதபுரம் சிறைக்கு மாத்திரமல்ல வெலிக்கடை சிறைக்கு சென்றதாகவும் அங்கு தமிழ் அரசியல் கைதிகளினை மிரட்டியதாகவும் அவர்களை முழங்காலில் இருத்தியதாகவும் கூட ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

'ஆகவே இந்த நடவடிக்கை தொடர்பில் சரியான விசாரணை நடத்தப்பட வேண்டும். இவர் இராஜாங்க அமைச்சராக இருப்பதற்கு தகுதியற்றவர். ஆகவே இவர் அமைச்சு பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும். ஒரு சிறைச்சாலைக்குள் துப்பாக்கியுடன் சென்று பேசுவதற்கு இவருக்கு உரிமை கிடையாது' எனவும் சுரேஷ் கூறினார்.

# ரணில், பாலித்தவுக்கு எதிராக தடையுத்தரவு

எனினும், அடிப்படை ஒழுக்காற்று நடவடிக்கைக்கேனும் முகங்கொடுக்க சந்தர்ப்பம் வழங்காமல், கட்சி உறுப்புரிமையில் இருந்து நீக்கியமை நியாயமற்றது என தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை ஆராய்ந்த மாவட்ட நீதவான் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் தடையுத்தரவு பிறப்பித்துள்ளார்.

எதிர்வரும் 29 ஆம் திகதி மன்றில் ஆஜராகி, இது தொடர்பில் விடயங்களை முன்வைக்குமாறு பிரதிவாதிகளான ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார ஆகியோருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, ஒழுக்காற்று குழுவின் செயலாளர் அமித்த ஜயசேகரவுக்கும் மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

> **அடிப்படை ஒழுக்காற்று நடவடிக்கைக்கு முகங்கொடுக்க சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை**

# 4 மாத சிசு மரணம்

இளவாலை, சென்ஜேம்ஸ் பகுதியைச் சேர்ந்த விமலநாதன் சஸ்விந் என்ற ஆண் சிசுவே, இவ்வாறு நேற்று முன்தினம் (14) உயிரிழந்துள்ளது.

இருதய நோயால் பீடிக்கப்பட்டிருந்த குறித்த சிசுவுக்கு, நேற்று முன்தினம் (14) திடீரென மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ளது. சிசுவை பெற்றோர் வைத்தியசாலைக்கு எடுத்து வந்து, வெளிநோயாளர் பிரிவில் அனுமதித்த போது, சிசு உயிரிழந்துவிட்டதாக, வைத்தியர்கள் தெரிவித்தனர்.சிசுவுக்கு மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனையில், கொரோனா தொற்று இருந்தமை உறுதிசெய்யப்பட்டது.

# கறுப்பு கொடியின் பாதிப்பு நாட்டுக்கே ஏற்படும்

இத்தாலியிலுள்ள இலங்கையர்களை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ நேற்று முன்தினம் (14) சந்தித்த போதே, வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

> **எமது நாடு சகல துறைகளிலும் பாரிய தேர்ச்சியைக் கண்டுள்ளது. எனவே, அவ்வாறான தலைவரை அகௌரவப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுப்பது சிறந்ததல்ல**

தொடர்ந்து தெரிவித்த அவர், நாம் நாட்டை பிரதிநிதித்துவபடுத்தியே இங்கு வந்துள்ளோம். இவ்வாறான விடயங்கள் மூலம் பலனைப் பெற்றுக்கொள்வற்காக முன்னிற்க பலர் உள்ளனர்.

இவ்வாறானவர்கள் நாட்டுக்காக ஏதாவது சிறந்த வேலைத்திட்டத்தை முன்னெடுப்பது குறித்து சிந்திப்பதற்கு பதிலாக, நாட்டை எவ்வாறு அழிக்கலாம்; நாட்டுக்கு எவ்வாறு அபகீர்த்தியை தேடிக்கொடுக்கலாம் என்றே செயற்படுகின்றனர்.

இந்தக் கொரோனா வைரஸ் பரவலின் மத்தியில் கூட, எமது நாடு சகல துறைகளிலும் பாரிய தேர்ச்சியைக் கண்டுள்ளது. எனவே, அவ்வாறான தலைவரை அகௌரவப்படுத்தும் நடவடிக்கை நாட்டுக்குள் மாத்திரமல்லாமல், வெளிநாடுகளிலும் முன்னெடுப்பது சிறந்ததல்ல.

எனவே, இவ்வாறான சந்தர்ப்பத்தில் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களான உங்களுக்கு நாட்டுக்காக செய்வதற்கு முக்கிய விடயமொன்று உள்ளது. அதாவது நீங்கள் சம்பாதிக்கும் பணத்தில் ஒரு தொகையை இலங்கைக்கு அனுப்புவீர்கள் என்றால், அது எமது பொருளாதாரத்துக்கு சக்தியாக மாறும். எனவே, நீங்கள் அனுப்பும் ஒவ்வொரு டொலருக்கும் மேலதிகமாக 2 ரூபாயை செலுத்த நிதியமைச்சும் திறைசேரியும் தீர்மானித்துள்ளன என்றார்.

# சுடுநீரை ஊற்றிய இராணுவ வீரர்

இதேவேளை தீக்காயங்களுக்கு உள்ளான வைத்தியசாலையின் ஊழியர், கராப்பிடிய வைத்தியசாலையின் 58ஆவது இலக்க வார்ட்டில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார் என வைத்தியசாலை பொலிஸார் தெரிவித்தனர்.

பத்தேகம, அம்பெகம பிரதேசத்தைச் சேர்ந்த தற்போது அநுராதபுரம், சாலியவெவ முகாமில் பணியாற்றி வரும் இராணுவ வீரர் தனது 8 வயது மகனுக்கு சுகவீனம் காரணமாக, கராப்பிடிய வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார்.

வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்றுவரும் தனது மகன் சுடு தண்ணீர் கேட்டதால், அதனை பெற்றுக்கொள்ள வைத்தியசாலையின் சிற்றுண்டிச் சாலைக்கு சென்றுள்ளார்.

இதேவேளை வைத்தியசாலையின் ஊழியரும் சிற்றுண்டிச் சாலைக்கு வந்து தேநீரை கோரியுள்ளார். தேநீரும், சுடு தண்ணீரும் ஒரே கவுண்டரில் வழங்கப்படுவதால் ஏற்பட்ட தாமதம் காரணமாக இராணுவ வீரருக்கும், ஊழியருக்கும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

வாய்த்தர்க்கம் உச்சக்கட்டத்தை அடைந்ததால் ஆத்திரமடைந்த இராணுவ வீரர் ஊழியரின் முகத்தில் சுடு தண்ணீரை ஊற்றியுள்ளார்.

# கைதிகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும்

சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த , தமிழ் அரசியல் கைதிகளை கொலை செய்வதாக மிரட்டியதாக குற்றச்சாட்டுக்கு மத்தியில் அவர் தனது டுவிட்டில் பதிவொன்றை இட்டுள்ளார்.

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த செப்டம்பர் 12 ஞாயிற்றுக்கிழமை அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று இரண்டு கைதிகளை முழந்தாளிடச் செய்து கொலை மிரட்டல் விடுத்ததாகக் கூறப்படுகிறது.

# தமிழ் இளைஞன் கைது

என ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இளைஞன், வைத்தியசாலைக்கு அருகாமையில் நிர்மாணிக்கும் கட்டட நிர்மாணப் பணிகளுக்காக இரண்டொரு வாரங்களுக்கு முன்னரே வருகைதந்துள்ளார்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட அவ்விளைஞன், மேலதிக விசாரணைகளுக்காக குற்றத் தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அந்தக் கைக்குண்டு முதலாம் மாடியின் மலசல கூடத்திலிருந்து அண்மையில் மீட்கப்பட்டது.

கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ள நீர்பாசன அமைச்சர் சமல் ராஜபக்ஷ, மற்றும் விமானப்படை தளபதி ஏயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரணவும் அந்த வைத்தியசாலையிலேயே சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வர்ணங்களில் மாற்றம் ஏற்படாது

■ எஸ். நிதர்ஷன்

யாழ்ப்பாணம் பொஸ்கோ பாடசாலை அருகிலுள்ள குளத்தின் வர்ணங்கள் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டதுடன், அதில் மாற்றங்கள் ஏற்படாது என, யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில், நேற்று (15) மதியம் நடைபெற்ற விசேட சந்திப்பின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இதனை தெரிவித்தார்.

தொடர்ந்துரைத்த அவர், அநுராதபுரம் சிறைச்சாலையில் இராஜாங்க அமைச்சர் மேற்கொண்டதாக கூறப்படும் செயல் உண்மையெனில் அது கண்டிக்கப்பட வேண்டியது என்றார். எமது மக்களை கவலைப்படுத்துகின்ற செயல்களை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், அவர் கூறினார்.

# ‘நாட்டில் கொரோனா ஜனாதிபதி கனவில் சஜித்’

நாடு கொரோனா வைரஸால் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியாகும் கனவில் இருப்பதாகத் தெரிவிக்கும் அமைச்சர் எஸ்.எம்.சந்தரசேன, சஜித்தின் செயற்பாடுகள் கவலையளிப்பதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினராக இருந்துபோது, நாட்டில் ஏற்பட்ட மனித உரிமைகள் மீறல்களை சர்வதேசத்துக்கு எடுத்துச் சென்றார். அவ்வாறு மஹிந்த ராஜபக்ஷ செய்திருக்காவிட்டால் இலட்சக் கணக்கான இளைஞர், யுவதிகள் நாட்டில் பலியாகியிருப்பார்கள் எனவும் தெரிவித்தார்.



மஹிந்த ராஜபக்ஷவே உள்நாட்டுப் பிரச்சினைகளை சர்வதேசத்துக்கு எடுத்துச் சென்றதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவும் எம்.பியுமான லக்ஷ்மன் கிரியெல்ல குற்றம் சுமத்தியுள்ளார். இது தவறான குற்றச்சாட்டு. எனினும், நாட்டில் மனித உரிமைகள் மீறப்பட்டபோது வேறு வழியில்லாமல் மஹிந்த ராஜபக்ஷ அவ்வாறு செயற்பட்டதாகவும் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் நிலைமைகளால் நாட்டின் பொருளாதாரம் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருந்த வேளையிலேயே நிதி அமைச்சராகப் பொறுப்பேற்ற பசில் ராஜபக்ஷ, இதுவரையில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருப்பதாகவும் கூறினார்.

அமைச்சுகளின் தேவையற்ற செலவுகளைக் கட்டுப்படுத்தி, சிறந்த முறையில் நிர்வாக செயற்பாடுகளை பசில் ராஜபக்ஷ முன்னெடுத்து வருகிறார். நிதி அமைச்சராகப் பொறுப்பேற்ற முதலாவது வரவு-செலவுத் திட்டம் நவம்பர் மாதம் முன்வைக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடு கொரோனா வைரஸ் நிலைமைகளுக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியாகும் கனவில் இருப்பதாகவும், நாட்டின் எதிர்க்கட்சி தலைவரின் செயற்பாடுகள் தொடர்பில் தான் கவலையடைவதாகவும் தெரிவித்தார்.

இப்போது தேர்தலா?

## சஜித்தின் மூளையை பரிசோதிக்க வேண்டும்

கொரோனா வைரஸ் நிலைமைகளுக்கு மத்தியில் தேர்தலை நடத்த வேண்டுமென கூறும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் மூளையை பரிசோதிக்க வேண்டுமென ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆசுமாரசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகத்தில் நேற்று (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளில் அரசாங்கமும் எதிர்க்கட்சியும் தங்களுக்குள்ள அதிகாரங்களை பயன்படுத்தவில்லை. மாறாக, அரசாங்கமும் எதிர்க்கட்சியும் கொரோனா வைரஸைப் பயன்படுத்தி தங்களது நிகழ்ச்சி நிரலை மாத்திரம் செயற்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு மத்தியில் தேர்தலை நடத்த வேண்டுமென கூறும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் மூளையை சோதிக்க



வேண்டும். இன்று கொரோனா வைரஸ் தொற்றாளர்களால் வைத்தியசாலைகள் நிரம்பி வழிகின்றன. இதனால் வீட்டிலேயே கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் உயிரிழந்து வருகிறார்கள்.

இதேவேளை 75 வருடக் கால வரலாற்றைக் கொண்ட ஐக்கிய தேசிய கட்சிக்கு இந்த நெருக்கடி நிலைமைகளை எவ்வாறு கையாள வேண்டும் என்பது நன்கு தெரியும். நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டுமாக இருந்தால், தற்போது சரிந்துள்ள பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், சுற்றுச்சூழல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தபட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

அனல்மின் நிலையத்தில் திருட்டு

## பாதுகாப்பு உத்தியோகத்தர் கைது

■ ரஸீன் ரஸ்மின்

கற்பிட்டி நுரைச்சோலை லக்விஜய அனல்மின் நிலையத்தில் பெயின்ட் உள்ளிட்ட சில பொருட்களை திருடிச் சென்ற குற்றச்சாட்டில் பாதுகாப்பு உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை மின்சார சபையின் கீழ் கற்பிட்டி, நுரைச்சோலையில் இயங்கும் லக்விஜய அனல் மின் நிலையத்தின் பாதுகாப்பு பிரிவில் தொடர்ச்சியாக கடமையாற்றி வந்த கினிகத்தேன பகுதியைச் சேர்ந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு நேற்று முன்தினம் (14) கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரான பாதுகாப்பு அதிகாரி பயணித்த வாகனம் கரம்பையிலுள்ள பொலிஸ் மற்றும் கடற்படையினர் இணைந்து நடத்தும் சோதனைச் சாவடியில் நிறுத்துக்கு சொந்தமானது எனக் கூறப்படும் பெயின்ட் மற்றும் வாகனப்பட்டிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளது.

பாதுகாப்பு உத்தியோகத்தரால் திருடிச் செல்லப்பட்டதாக் கூறப்படும் பெயின்ட் உள்ளிட்ட பொருட்களின் பெறுமதி சுமார் 30 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமானவை எனவும் தெரிவிக்கும் பொலிஸார், மேலதிக விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர்.



## ஒரே நேரத்தில் வீதியை கடந்த 100 யானைகள்

■ காஞ்சனகுமார ஆரியதாச

கண்டி- யாழ்ப்பாணம் ஏ9 வீதியின், தம்புள்ளை-கெக்கிராவைக்கிடையில் 89ஆம் மைல் கல் பிரதேசத்தில், நேற்று (15) அதிகாலை 100 யானைகளைக் கொண்ட யானைக் கூட்டமொன்று வீதியைக் கடந்துள்ளன.

இதன்போது குறித்த வீதியில் பயணித்த நபர் ஒருவர், இக்காட்சியை தனது அலைபேசியில் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

கலாவாவிக்கு அண்மையில் உள்ள குறித்த யானைகள், இரவு நேரத்தில் கெக்கிராவ- மடாடுகம ஊடாக கிராமங்கள் மற்றும் விளைநிலங்களுக்குச் சென்று உணவுத் தேடிய பின்னர், மறுநாள் பகல் பொழுதுகளில் மீண்டும் கலாவாவியை நோக்கி பயணிப்பதாக வனஜீவராசிகள் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த யானைக் கூட்டம் பிரதான வீதியூடாக வீதியைக் கடக்கும் வரை, அந்த வீதியில் அனைத்து வாகனங்களும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், யானைகள் எவருக்கும் எவ்வித தீங்கையும் ஏற்படுத்தாமல் அமைதியாக வீதியைக் கடந்து சென்றுள்ளன.

## கட்டுநாயக்கவில் அதிநவீன பி.சி.ஆர் இயந்திரம்

மூன்று மணித்தியாலங்களுக்குள் பி.சி.ஆர் பரிசோதனை அறிக்கையை பெறக்கூடிய அதிநவீன பி.சி.ஆர் இயந்திரமொன்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ளதாக சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு மேற்கொண்டிருந்த கண்காணிப்பு விஜயத்தின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், சுற்றுலா செயற்பாடுகளை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களின் கீழ் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள அதிநவீன பி.சி.ஆர் பரிசோதனை இயந்திரம் இம்மாதம் 20ஆம் திகதி முதல் இயங்கும் எனவும் தெரிவித்தார்.

மணித்தியாலம் ஒன்றுக்கு 500 பி.சி.ஆர் பரிசோதனைகளையும் நாளொன்றுக்கு 7,000 பரிசோதனைகளையும் இந்த இயந்திரத்தின் ஊடாக மேற்கொள்ள முடியும். இதனூடாக வெறும் 3 மணித்தியாலங்களுக்குள் பி.சி.ஆர் பரிசோதனை அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

பி.சி.ஆர் பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்படாத இரு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்ட சுற்றுலாப் பயணிகள், நாடு முழுக்கப் பயணிக்க முடியும். இதனை நிர்வகிக்கும்



முழுப்பொறுப்பும் விமான நிலையத்துக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், இரண்டு வருட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இது நடைமுறைப்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

## ஆபத்து குறையவில்லை

நாட்டில் காணப்பட்ட ஆபத்தான நிலைமை இன்னும் குறையவில்லை என ஸ்ரீ லங்கா வைத்திய சங்கத்தின் தலைவர் விசேட வைத்தியர் பத்மா குணரத்ன தெரிவித்துள்ளார்.

நாடு தற்போதும் சிகப்பு வலயத்திலேயே இருப்பதாகவும், நாளாந்தம் 2,000 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் தொடர்ந்து இனங்காணப்படுகிறார்கள். எனினும், சமூகத்தில் நாளாந்தாம் 6,000 இக்கும் அதிகமானோருக்கு கொரோனா வைரஸ் தொற்று பரவலாமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆபத்தான டெல்டா வைரஸ் நாடு முழுவதிலும் பரவியுள்ளதால், கொரோனா



வைரஸ் ஆபத்து குறைந்துவிட்டதாகக் கூற முடியாது. நாட்டில் மீண்டும் ஒரு கொரோனா வைரஸ் அலை ஏற்படுவதைத் தடுப்பதற்கு அனைவரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

## தடுப்பூசிகளுக்கு அழுத்தங்கள் வேண்டாம்

அரசியல்வாதிகளின் தொடர்பு இருப்பதாகக் கூறிக்கொண்டு, தமக்கு தடுப்பூசிகளை வழங்க வேண்டுமெனக் கூறி, தேவையற்ற அழுத்தங்களை சுகாதார அதிகாரிகளுக்கு வழங்க வேண்டாமென பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு தொடர்ந்து கருத்துரைத்த உபுல் ரோஹன, கெகிராவ சுகாதார வைத்திய அதிகாரி மீது, கடந்த 14ஆம் திகதி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பௌத்த பிக்குகளால் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கெகிராவ சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலோ அல்லது அதனை அண்மித்த பகுதிகளிலோ, கொரோனா



வைரஸூக்கான இரண்டாவது தடுப்பூசி செலுத்தப்படவில்லை. எனினும் இரண்டாவது டோஸ் வேண்டுமென தெரிவித்து அங்கு மூவர் வந்திருந்தனர்.

மூவருக்கு மாத்திரம் தடுப்பூசிகளை வழங்க முடியாது. இதனை புரிந்து கொள்ளாத பிக்கு, தாக்குதல் நடத்தியுள்ளார். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் எனவும் அவர் தெரிவித்தார்.

## அமலுக்கு வந்தது நிதிச் சட்டமூலம்

2021ஆம் ஆண்டு 18ஆம் இலக்க நிதிச் சட்டமூலத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கையெழுத்திட்டு சான்றுரைப்படுத்தியுள்ளார்.

இம்மாதம் 07ஆம் திகதி விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இச்சட்டமூலம் திருத்தங்களுடன் மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இதற்கு ஆதரவாக 134 வாக்குகளும் எதிராக 44 வாக்குகளும் செலுத்தப்பட்டிருந்தன.

நிதிச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பின்போது எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷமன் கிரியெல்ல வாக்கெடுப்பைக் கோரியதால் இச்சட்டமூலம் சபையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

இச்சட்டமூலத்தை சபாநாயகர் கையெழுத்திட்டு நேற்று (15) சான்றுரைப்படுத்தியதால் இந்த நிதிச் சட்டமூலம் நேற்று முதல் அமலுக்கு வந்ததுள்ளது.

மத்திய வங்கியின் சுயாதீனத்தில்

## சந்தேகம் எழுந்துள்ளது

காலையில் நிதி இராஜாங்க அமைச்சராக இருந்த அஜித் நிவாட் கப்ரால், மாலையில் மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி, இதனால் மத்திய வங்கியின் சுயாதீனத் தன்மை பாரியளவில் கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்படுபவருக்கு இருக்க வேண்டிய தகைமைகள் தொடர்பில், நிதிச் சட்டத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கப்ரால் நியமிக்கப்படுவது, அவருக்குள்ள அனுபவத்தையும் அறிவையும் பயன்படுத்தி, பொருளாதாரச் சீரழிவை நிறுத்தி விடுவதற்காகவே எனக் கூறகிறார்கள்; அந்நிய செலாவணி நெருக்கடியைத் தீர்ப்பதற்காகவே எனக் கூறுகிறார்கள். நிதி இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் வெளிக்காட்டிய திறமை, ஆற்றல், அனுபவம் என்ன? எனவும் அவர் இதன்போது வினவினார்.

அஜித் நிவாட் கப்ரால், மத்திய வங்கியின் ஆளுநராக இருந்தபோது, அவரின் திறமைகள் என்ன என்பது தடயவியல் கணக்காய்வு அறிக்கையில் தெரியவந்துள்ளதாகவும் கேலி செய்த



**“ அஜித் நிவாட் கப்ரால், மத்திய வங்கியின் ஆளுநராக இருந்தபோது, அவரின் திறமைகள் என்ன என்பது தடயவியல் கணக்காய்வு அறிக்கையில் தெரியவந்துள்ளது. பிணைமுறி மோசடியுடன் தொடர்புபட்ட ஆர்ஜுன மகேந்திரன், அலோசியஸ் குழுவினரையும் பாதுகாத்து கொண்டார்**

அவர், பிணைமுறி மோசடியுடன் தொடர்புபட்டவர்கள் என்பதாலேயே ஆர்ஜுன மகேந்திரன், அலோசியஸ் குழுவினரையும் பாதுகாத்து கொண்டார்கள் எனவும் தெரிவித்தார்.

மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், வஞ்சகம் நிறைந்த கபடத்தனமான வரலாறு கொண்ட ஒருவர். அவரால் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியாது எனவும் சுனில் ஹந்துன் நெத்தி தெரிவித்தார்.

தனிநபர் அட்டூழியம்:

# வாசிகசாலை தரை மட்டம்

■ எம்.எஸ்.எம்.ஹனீபா

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பாலமுனை, திராய்க்கேணி கிராமத்தில் அரச காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வாசிகசாலை கட்டடம், தனிநபரால் சட்டவிரோதமாக இடிக்கப்பட்டு உள்ளதாக, அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சட்டத்தரணி எம்.ஏ.அன்சில், நேற்று (15) தெரிவித்தார்.

1990ஆம் ஆண்டு, நாட்டில் ஏற்பட்ட யுத்த கால சூழ்நிலையின் போது, திராய்க்கேணி கிராம மக்கள் அச்சம் காரணமாக வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றனர்.



இவ்வாறு இடம்பெயர்ந்து சென்ற மக்களை, மீண்டும் தங்களது சொந்தக் கிராமத்தில் மீள்குடியேற்றல் திட்டத்தின் கீழ், முன்னாள் அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் மீள்குடியேற்றம் செய்தார்.

மக்களை மீள்குடியேற்றம் செய்யும் போது, திராய்க்கேணி கிராமத்தில் சந்தை, சிறுவர் பூங்கா, சுகாதார நிலையம், வாசிகசாலை என்பன நிர்மாணிக்கப்பட்டன.

இவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட வாசிகசாலை கட்டடத்தை அங்குள்ள மக்கள், வாசிகசாலை மற்றும் பொதுத் தேவைகளுக்காக பயன்படுத்தி வந்தனர்.

இந்நிலையில், வாசிகசாலைக் கட்டடம், தனிநபர் சார்ந்த ஒரு சிலரால் உடைக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாது. இது தொடர்பாக சம்மந்தப்பட்ட நபர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி, அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எல் அமானுல்லாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் சட்டத்தரணி எம்.ஏ.அன்சில் மேலும் தெரிவித்தார்.

# வாக்குறுதிகளை நிறைவேற்றவும்

■ ஹஸ்பர் ஏ ஹலீம்

2020ஆம் ஆண்டு பட்டதாரி பயிலுநர்களாக நியமிக்கப்பட்ட பட்டதாரிகளுக்கு உடன் நிரந்தர நியமனம் வழங்க வேண்டுமென திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார் .

கிண்ணியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் (14) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும்




தெரிவிக்கையில், "ஒரு வருடத்துக்குப் பின்னர், நிரந்தர நியமனம் வழங்கப்படும் எனக் கூறப்பட்ட போதிலும், மேலும் ஆறு மாதங்கள் நீடித்திருப்பது பட்டதாரிகளுக்கு கஷ்டத்தை ஏற்படுத்தும்.

அவர்களுக்கான கொடுப்பனவாக தற்போது 20 ஆயிரம் ரூபாயே வழங்கப்படுகிறது. இதனையும் நேர காலத்தோடு, சில செயலகங்களில் வழங்கப்படுவதில்லை. 10ஆம் திகதிக்குள் வழங்க வேண்டும் என்ற நிலை இருந்தாலும், கால நீடிப்புச் செய்வது தொடர்கிறது. தற்போதை நிலையில், நிரந்தர நியமனத்தை குறைந்தது மூன்று மாதத்துக்குள் வழங்க வேண்டும்" என்றார்.



# கணக்காளருக்கு இடமாற்றம்

திருகோணமலை மாவட்டச் செயலகத்தின் கணக்காளராக இதுவரை காலமும் கடமையாற்றிய பி.டபிள்யூ.பாக்யா, இன்று (16) தொடக்கம் கந்தளாய் தள வைத்தியசாலையின் கணக்காளராக இடமாற்றம் பெறுகின்றார்.
இதனை முன்னிட்டு, மாவட்டச் செயலாளர் சமன் தர்சன பாண்டிகோராளவின் தலைமையில், மாவட்டச் செயலகத்தில் நேற்று (15) பிரியாவிடை நிகழ்வு நடைபெற்றது. குறிப்பிட்ட சில உத்தியோகத்தர்களது பங்குபற்றலுடன் மாத்திரம் நடைபெற்ற இந்த நிகழ்வில், கணக்காளரின் சேவையைப் பாராட்டி, மாவட்டச் செயலாளரால் பொன்னாடை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டதுடன், அவருக்கான நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.
2013ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி, இலங்கை கணக்காளர் சேவையின் மூன்றாம் தர உத்தியோகத்தராக திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் இணைந்து, கடமையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

ஏ.எம்.ஏ.பரீட்

மனித உரிமை தொடர்பான பாதுகாப்பு

# சர்வதேசத்தால் வலுவுள்ளதாகும்

■ கே.எல்.ரீ.யுதாஜித்



தமிழர்களின் மனித உரிமை தொடர்பான பாதுகாப்பு சர்வதேசத்தால் வலுவுள்ளதாக மாறும் என நம்புகின்றேன் என்று, முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் பத்மநாபா மன்றத்தின் (ஈ.பி.ஆர்.எல்.எப்) தலைவருமான இரா.துரைரெத்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையில், "ஐ.நா மனித உரிமைகள் தொடர்பான அமைப்பால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மூலம், தமிழ் மக்களது மனித உரிமைகள் எதிர்காலத்தில் பாதுகாக்கப்பட வேண்டும்.

"மனித உரிமை தொடர்பான செயற்பாட்டுக்குழு சிறப்பான முறையில் செயற்பட்டதன் காரணமாகவே, புலம்பெயர்ந்த நாடுகளில், பல நாடுகள் தமிழர்களுக்கு புகலிடம் வழங்கியதை மறக்கவோ, மறைக்கவோ முடியாது.

**" ஐ.நா மனித உரிமைகள் தொடர்பான அமைப்பால் மேற்கொள்ளப்படும் நடவழிக்கைகள் மூலம், தமிழ் மக்களது மனித உரிமைகள் எதிர்காலத்தில் பாதுகாக்கப்பட வேண்டும்**

"குறிப்பிட்ட காலத்துக்கு முன் ஓரிருவர் இது தொடர்பாக செயற்பட்டாலும், புலம்பெயர் நாடுகள் குறுகிய வட்டத்துக்குள் சிந்திக்கவில்லை. அவர்கள் புகலிடம் வழங்கினார்கள்.

"இந்நிலையில், மனித உரிமைகள் தொடர்பான செயற்பாடுகளுக்கு விரலை நீட்டினாலும், அச் செயற்பாடு என்பது உண்மைக்கு மாறாக இருக்காது.

"ஆயுதப்போராட்டம் நடைபெற்ற பல நாடுகளிலும் பல தசாப்தங்களுக்கு மேலாக மனித உரிமைகள், செயற்பாடுகள் சர்வதேச மனித உரிமை அமைப்பினால் முடக்கி விடப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

"எதிர்காலத்தில் தமிழர்களின் மனித உரிமை தொடர்பான செயற்பாடுகள் சர்வதேசத்தின் மீது நம்பிக்கையை வலுப்பெற வைக்கும் என நம்புகின்றேன்" என்றார்.

பொலிஸ் எனக் கூறி

# கொள்ளையிட்ட இளைஞனுக்கு மறியல்

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு, வவுணதீவு பிரதேசத்தில் பொலிஸ் எனக் கூறி, வீதியால் சென்றவர்களை வழிமறித்து, அலைபேசி, பணம் ஆகியவற்றைக் கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இளைஞனை, எதிர்வரும் 28ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம். றிஸ்வான் உத்தரவிட்டார்.

வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள வாழைக்காடு பகுதியிலுள்ள பாலம் ஒன்றுக்கு அருகாமையில் தனியாக பயணித்த 3 வயோதிபர்களை இளைஞர் வழிமறித்துள்ளார்.

தான் வவுணதீவு பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுவதாகவும் பொறுப்பதிகாரி வயலுக்குள் இருப்பதாகத் தெரிவித்து அவர்களை மிரட்டி, அவர்களிடமிருந்து சிறிய ரக 3 அலைபேசிகள், ஒவ்வொருவரிடமிருந்தும் தலா 300, 400, 250 ரூபாய் பணம், ரொச்லைற் ஒன்றையும் கொள்ளையிட்டுள்ளார் என பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

# கசிப்புடன் பெண் கைது

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு, சித்தாண்டி பிரதேசத்தில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி ஐ.பி.பி.எஸ். பி.பண்டார தெரிவித்தார்.

கிடைக்கப் பெற்ற தகவலின் பேரில், மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்கவின் பணிப்புரைக்கமைய,



மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் சுற்றி வளைவைப்பின்போதே, பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட பெண்ணிடமிருந்து 14,000 மில்லிலீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

கூட்டமைப்பு கூறியதையே உயர்ஸ்தானிகரும் கூறியிருப்பது

# வரவேற்கத்தக்கது

■ க. அகரன்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கூறியதையே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரும் கூறியிருப்பது வரவேற்கத்தக்கது என, பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (14) வவுனியாவுக்கு பிரத்தியேக விஜயமொன்றை மேற்கொண்ட அவர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே, இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துரைக்கையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்பேரவை கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ள இந்த வேளையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அம்மையார், இலங்கை சம்பந்தமான பொறுப்பு கூறல், நல்லிணக்கம், மனித உரிமைகள் என்ற அடிப்படையிலே 46/1 என்கின்ற தீர்மானம் மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட பின்னர், வாய்மூலமான முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார்.

அதிலே மிகவும் விசேடமாக ஜூன் மாதத்திலே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஐக்கிய நாடுகள் நிறுவனத்தோடு பொறுப்பு கூறல் விடயத்திலும் நல்லிணக்கத்திலும் தாங்கள் இணைந்து செயற்பட தயார் என்று விடுத்த செய்தியை மேற்கோள்காட்டி, அதை தாங்கள் கவனித்திருப்பதாகவும் அதனை நடைமுறையிலே தாங்கள் காண விரும்புகிறோம் என்று ஆரம்பித்திருக்கிறார். அது மிகவும் வரவேற்கப்பட வேண்டிய ஒரு விடயம்.

அதற்கு மேலதிகமாக, இலங்கையிலே மனித உரிமை நிலைமை, மோசமாகிக் கொண்டு போவதனை பல உதாரணங்களை மேற்கோள்காட்டி, அவர் கூறியிருக்கிறார் எனவும் சும்திரன் தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்திலே, அவர்களுடைய உறவுகள் எதிர்பார்க்கிற மாதிரியான நீதி கொடுக்கப்பட வேண்டும் என்று திரும்பவும்




அவர் வலியுறுத்தி இருக்கிறார் எனத் தெரிவித்த சுமந்திரன், தற்போது கொண்டுவரப்பட்டிருக்கிற அவசரகால பிரகடனம் குறித்து, அதனால் ஏற்படக்கூடிய அபாயங்கள் குறித்து, அதன் மூலமாக இராணுவ மயமாக்கப்படுதல், இன்னும் தீவிரமாகலாம் என்பதனையும் கூறி, உறுப்பு நாடுகள், இலங்கையின் இந்த நிலைமைகளை தீவிரமாக கண்காணிக்க வேண்டும் என கூறி அழைப்பு விடுத்திருக்கிறார் எனவும் கூறினார்.

உறுப்பு நாடுகள் இந்த விட குறித்து, இன்றைக்கு பொதுவான அபிப்பிராயங்களை பகிர்ந்து கொள்கின்ற போது, இலங்கை சம்பந்தமாக தங்களுடைய கரிசனையை, இந்த வாய் மூல அறிக்கையிலே எழுப்பப்பட்ட கரிசனைகளோடு ஒப்பிட்டு வெளிப்படுத்த வேண்டும் என்று, உறுப்பு நாடுகளிடத்திலே கோரிக்கை விடுக்கிறோம் எனவும், சுமந்திரன் தெரிவித்தார்.

பல விடயங்களை

# உயர்ஸ்தானிகர் குறிப்பிடவில்லை

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்



தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் பல விடயங்கள் பற்றி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் தமது அறிக்கையில் குறிப்பிடவில்லை என, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் தமது அறிக்கையை வெளியிட்டுள்ளார். அதனை எப்படிப் பார்க்கிறீர்கள்? என அவரிடம் வினவிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் பல விடயங்கள் பற்றி அவர் குறிப்பிடவில்லை என்பது மன வருத்தத்தைத் தருகிறது.

ஊதாரணமாக, தமிழ் மக்களின் காணிகளை, அரசாங்கம் தந்திரமாகவும் பலாத்காரமாகவும் அபகரிப்பது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

ஒருவேளை பல உண்மையான தரவுகளை விவரமாக அவர் எதிர்பார்த்து இருக்கின்றாரோ, நான் அறியேன் எனத் தெரிவித்த அவர், அடுத்த மார்ச் மாதக் கூட்டத்துக்கு முன்னர், இவை பற்றி முழுமையான விவரங்களை சேகரித்து அனுப்ப வேண்டும் எனவும் கூறினார்.

எனினும் பல முக்கிய விடயங்களை அவர் தமது உரையில் குறிப்பிட்டுள்ளார். மொத்தத்தில் நாம் எதிர்பார்த்த பல விடயங்கள் கூறப்படாமல் விட்டாலும், தற்போதைக்கு இலங்கை அரசாங்கத்தை சர்வதேச கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளார்.

அரசாங்கமும் வேறு வழியின்றி, அதற்கு அசைந்துள்ளது. பணம் தான் பிரச்சினை. அத்துடன், நாம் நடப்பவை பற்றிய உண்மை விவரங்களை பட்டியலிட்டு, அவருக்கு அனுப்பக் கடமைப்பட்டுள்ளோம் எனவும், விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

# வீடு கையளிப்பு...









வவுனியா மாவட்டத்திலுள்ள சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு, சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ரஞ்சன் லமாஹேற, நேற்று முன்தினம் (14) புதிய வீடொன்றை, நன்கொடையாக வழங்கினார்.
கடுமையான பொருளாதார நெருக்கடியில் வாழும் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு, வவுனியா, மாமயிலங்குளம் பகுதியில், புதிய வீடொன்றை வங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

க. அகரன்

# 9 கிலோ ஐஸுடன் நால்வர் கைது

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

தலைமன்னார் கடற்கரை பகுதியில் வைத்து கடற்படையினரால், நேற்று முன்தினம் (14) நள்ளிரவு மேற்கொள்ளப்பட்ட ரோந்து நடவடிக்கையின் போது, சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட 9 கிலோ 735 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது, சந்தேகத்தின் பேரில் தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த நால்வர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலைமன்னார் கடற்பரப்பில், கடற்படையினர் ரோந்து நடவடிக்கை முன்னெடுத்துக்கொண்டிருந்த போது, சந்தேகத்துக்கிடமான முறையில் வந்த மீன்பிடி படகொன்று சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது மீன் படகில் இருந்த மீன்பிடி வலைகளுக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், 10 பொதிகளில் இருந்த ஐஸ் ரக போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதையடுத்து, தலைமன்னார் பொலிஸாருக்கு கடற்படையினர் வழங்கிய தகவலின் அடிப்படையில், தலைமன்னார் பொலிஸார் குறித்த பகுதிக்கு விரைந்து, போதைப் பொருள்களை மீட்டதுடன், குறித்த சந்தேக நபர்களையும் கைது செய்தனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப் பொருளின் பெறுமதி 80 மில்லியன் ரூபாய்க்கும் அதிகம் என பொலிஸார் தெரிவித்தனர்.











## தெளிவூட்டல்

ஒன்றிணைந்த அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்களால் கடந்த இரண்டு மாதங்களாக மேற்கொண்டு வரும் போராட்டம் தொடர்பாக, தலவாக்கலை நகரிலுள்ள மதத் தலைவர்கள், வங்கி முகாமையாளர்கள், தலவாக்கலை நகர வர்த்தக சங்கத்தின் தலைவர் ஆகியோரை சந்தித்து, ஒன்றிணைந்த அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்களின் சார்பாகத் தெளிவூட்டப்பட்டது. (பி. கேதீஸ்)

குடியிருப்பு எரிந்து பல மாதங்கள் கடந்தும்

# தற்காலிக குடிசைகளே நிரந்தரமாகின





■ செ.தி.பெருமாள்

மஸ்கெலியா, குயின்ஸ்லேண்ட் பிரிவில், கடந்த மார்ச் மாதம் 11ஆம் திகதி 20 குடியிருப்புகளைக் கொண்ட லயக்குடியிருப்பு ஒன்றில் ஏற்பட்ட தீயால் நிர்க்கதிக்கு உள்ளானவர்களுக்கு, இதுவரை நிரந்தர வீடுகள் அமைத்துகொடுக்கப்படவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் குற்றஞ்சுமத்துகின்றனர்.

பாதிக்கப்பட்ட 20 குடியிருப்புகளில் வசித்த 83 பேரையும், தோட்ட நிர்வாகம், குயின்ஸ்லேண்ட் பாடசாலையில் தற்காலிகமாக தங்க வைத்ததுடன், சுமார் இரண்டு வாரம் தங்கிய பின்னர், பாடசாலை மீண்டும் திறக்கப்பட்டு வகுப்புகள் நடத்தப்பட வேண்டிய நிலையில், பாதிக்கப்பட்டவர்கள் தீப்பரவலுக்கு உள்ளான தமது குடியிருப்புகளுக்கே மீண்டும் திரும்பி வந்து வசிக்கத்தொடங்கினர்.

இவ்வாறு பழைய குடியிருப்புக்கே திரும்பி வந்தவர்களுக்கு, தோட்ட நிர்வாகம், டிரஸ்ட் நிறுவத்தின் கீழ், 30 கூரைத்தகடுகள், பலகைகள், மூங்கில் மரங்கள் என்பவற்றை வழங்கியதுடன், அவற்றைப் பயன்படுத்தி, தீயால் எரிந்த குடியிருப்பு பகுதிகளிலேயே குடிசைகள் அமைத்து, வசிக்குமாறு பணித்துள்ளது.

இதற்கமைய கடந்த 6 மாதங்களாக குறித்த தற்காலிக குடிசைகளில் பலவித அவலங்களுடன் இவர்கள் வாழ்ந்து வருவதுடன், இவர்களுக்கான நிரந்தர குடியிருப்புகளை அமைத்துக்கொடுக்க எவரும் முன்வரவில்லை.

எனினும், தற்காலிக தீர்வாகவே இந்த ஏற்பாடை செய்துகொடுத்தாக தோட்ட நிர்வாகம் தெரிவித்துள்ள நிலையில், தமக்கான தனிவீட்டுத் திட்டம் ஒன்றை அமைத்துக் கொடுக்க சம்பந்தபட்டவர்கள் முன்வரவேண்டும் என்றும் இம்மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மலையக உரிமை மீட்பு பயணத்தை கைவிடோம்

■ இரா.யோகேசன், எஸ்.சதீஸ், துவாரகஷன்



மலைய உரிமை மீட்புப் பயணத்தை மேற்கொள்கின்ற போது, அதற்கு கல்லெறிந்தாலும் இந்தத் திட்டத்தை கைவிடப்போவதில்லை என முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும் மலையக மீட்பு பேரவையின் உறுப்பினருமான ராஜாராம் ராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

மலையக மீட்பு பேரவையால் ஊடகவியலாளர்களுக்கு உலர் உணவு பொருட்கள் வழங்கும் வைபவம் ஹட்டனில் நேற்று(15) இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், தற்போது தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமல்படுத்தப்பட்டுள்ள இவ்வேளையில் பலரும் சிரமங்களுக்குள்ளாகி இருக்கின்றனர். இதனால் ஊடகவியலாளர்களின் தேவையை அறிந்து, மலையக மீட்பு பேரவை, ஊடகவியாலளர்களுக்கு உலர் உணவை வழங்கி வைக்கின்றது.

அன்று மிக சொற்ப அளவில் ஆரம்பித்த இந்த விடயம், இன்று மிக பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. அந்த வகையில், இன்று நாங்கள் நூற்றுக்கு மேற்பட்டவர்களுக்கு பகிர்ந்தளித்துள்ளோம். இந்த விடயத்தை மேற்கொண்டு செல்கின்ற போதே கல்லெறிய ஆரம்பித்து விட்டார்கள். நாங்கள் அரசியல் செய்யவில்லை.

எமது அமைப்பை தவறான கண்ணோட்டத்தில் பார்க்க கூடாது. நடுநிலையாகப் பேணப்பட வேண்டும். இன்றைய சூழலில் ஊடகவியாளர்களுக்கு இந்தப் பொருட்கள் கூட பெரும் தட்டுப்பாடாக இருக்கும். அவர்கள் எங்களிடத்தில் கூறாமல் இருந்திருக்க கூடும். நாங்கள் அதை அறிந்து செயற்படுகின்றோம் என்றார்.

ஆசிரியர் போராட்டத்துக்கு தீர்வை வழங்காமல்

# அரசாங்கம் பொய் மௌனத்தை காக்கின்றது

### முற்போக்கு ஜனநாயக ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

■ ஆ.ரமேஸ்



சம்பள உயர்வை கேட்கவில்லை; சம்பள முரன்பாட்டைத் தீர்க்கக் கோரியே போராடுகிறோம் எனத் தெரிவித்த முற்போக்கு ஜனநாயக ஆசிரியர் சங்க செயலாளர் வே. தினகரன், பல்வேறு பரிமாணங்களை எடுத்துள்ள இந்தப் போராட்டத்திற்கு அரசாங்கம் உறுதியான தீர்வினை வழங்குவதில் ஒரு பொய் மௌனத்தை காத்து நிற்கிறது எனவும் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பாக, நேற்று (15) காலை அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

அதிபர், ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக, பல்வேறு கால இழுத்தடிப்புகளை செய்வதிலும், ஆசிரியர்களுக்கு எதிரான பொய் பிரசாரங்களை மேற்கொள்வதிலும் கவனம் செலுத்தி வருகின்ற அரசாங்கம், கல்விச் சமூகத்திற்கு எதிராக மக்களைத் தூண்டி விட்டும் வருகிற உண்மை நிலை தெரியாது சிலர் கல்வி சமூகத்தினருக்கு எதிராக செயற்படுகின்றனர்.

இந்த விடயத்தில் அரசாங்கம் பொய்யாக ஒரு நிதிப் பிரச்சினையை உருவாக்கி, பரவலாக மக்களிடையே பிரசாரம் செய்து வருகிறது என்பதை சுட்டிகாட்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்களின் இந்த வேலை நிறுத்தப் போராட்டம் தனியே சம்பள முரண்பாடுகளுக்கு எதிரானது மட்டுமல்ல. இலவச கல்வியை உறுதிப்படுத்துதல், தரமான கல்வியை உறுதிப்படுத்தல், வரவு செலவுத் திட்டத்தில் ஆறு சதவீதத்தை கல்விக்கு ஒதுக்குதல், கல்வி இராணுவ மயமாக்கல், தனியார்மயமாக்கல் என்பவற்றுக்கு எதிரானதாகவும் இருக்கிறது என தெரிவித்துள்ளார்.

பதினான்கு வயது சிறுமியை

# தாயாக்கிய இளைஞன் கைது

■ மொஹொமட் ஆஸிக்

பதினான்கு வயது சிறுமியொருவர் குழந்தை பிரசவித்த சம்பவம் தொடர்பில், 29 வயது இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என, பூஜாப்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

பூஜாபிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிராமம் ஒன்றில் வசிக்கும் இச் சிறுமி, மூன்று தினங்களுக்கு முன்னர் பெண் சிசு ஒன்றை பிரசவித்துள்ளதுடன், பிரசவத்துக்கு பின்னர், ஏற்பட்ட கடுமையான இரத்தப் போக்கால், சிறுமி கண்டி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து வைத்தியசாலையிலிருந்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளுக்கு அமைய, மனைவியை விட்டு பிரிந்து வாழும் 29 வயது இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை கலகெதர நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# கண்டியில் யாசகர்களுக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டது

■ மொஹொமட் ஆஸிக்

கண்டி நகரில் ஆங்காஙகே தங்கி இருக்கும் யாசகர்களுக்கும் தடுப்பூசி செலுத்தும் திட்டத்தை கண்டி மாநகர சபை ஆரம்பித்துள்ளது.

இதன் அடிப்படையில், கண்டி நகரின் மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகிலுள்ள பஸ் தரிப்பிடத்தில், தங்கி இருக்கும் சுமார் 57 யாசகர்களுக்கு நேற்று முன்தினம்(14) தடுப்பூசிகளை செலுத்த மாநகர சபையின் சுகாதார பிரிவினர் நடவடிக்கை எடுத்தனர்.

யாசகர்கள் மூலம் தொற்று ஏறபடும் சாத்தியம் அதிக அளவில் இருப்பதால், இந்த நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படுமென, கண்டி மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

மஸ்கெலியா பகுதியில்

# மின் தகனசாலை

### பிரதேச சபையில் பிரேரணை நிறைவேற்றம்

■ செ.தி பெருமாள்



மஸ்கெலியா பிரதேசத்தில் மின்தகனசாலை ஒன்றை அமைப்பது தொடர்பான பிரேரணையொன்று, மஸ்கெலியா பிரதேச சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

மஸ்கெலியா பிரதேசத்தில் கொரோனாவால் உயிரிழப்பவர்களின் சடலங்கள், நோர்வூட் தகனசாலையிலேயே தகனம் செய்யப்பட்டு வருகின்றது.

இதனால் மஸ்கெலியாவிலிருந்து நோர்வூட்டுக்கு சடலங்களை கொண்டு செல்வதில் சிக்கல் ஏற்படுவதை கவனத்தில்கொண்டு, இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதற்கமைய, இந்த மாதம் 13ஆம் திகதி இடம்பெற்ற சபை அமர்வின் போது, தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதேச சபை உறுப்பினர் ராஜ் அசோகால் இது தொடர்பான பிரேரணை முன்வைக்கப்பட்டது.

இப்பிரேரணைக்கு, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் ஆதரவு தெரிவித்து, ஏகமானதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிரேரணை நிறைவேற்றப்பட்டதை அடுத்து, இது தொடர்பில் சுகாதார அமைச்சு, மாவட்ட செயலகம் மற்றும் உரிய தரப்பினர்களுக்கு கடிதம் அனுப்ப உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீர்வீழ்ச்சியில் வழுக்கி விழுந்த

# இஸ்ரேல் இளைஞனுக்கு சிகிச்சை

■ சுமணசிறி குணதிலக

எல்ல பகுதியில் அமைந்துள்ள இராவணா எல்ல நீர்வீழ்ச்சியைப் பார்வையிட வருகைத் தந்திருந்த இஸ்ரேல் நாட்டு இளைஞர் ஒருவர், நீர்வீழ்ச்சியில் வழுக்கி விழுந்து, கடும் காயங்களுக்குள்ளாகி உள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (14) இடம்பெற்றுள்ளதாக எல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கைக்கு சுற்றுலாப் பயணியாக வருகை தந்த இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த 23 வயது இளைஞர், நீர்வீழ்ச்சிக்கு அருகிலுள்ள கற்பாறையில் ஏறும் போது, வழுக்கி 10 அடி ஆழமான பள்ளத்தில் விழுந்துள்ளார். இதன்போது கடும் காயங்களுக்கு உள்ளான அவர், வெல்லவாய ஆரம்ப வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், மேலதிக சிகிச்சைக்காக மொனாராகலை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

எனினும், அவரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால், பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ள அவர், தீவிரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கறைபடிந்த ‘நிரபராதி’யின் கைகளுக்குச் சென்ற உயிர்பறிக்கும் ஈனம்

அதிகாரம் கையிலிருக்கும் போது, மிகமிகக் கவனமாகக் கையாள வேண்டும் என்பது, இராஜினாமா செய்த சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின், அத்துமீறிய செயற்பாடுகளில் இருந்து ஒவ்வொருவரும் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் மதுபோதையில் நுழைந்த அவர், தங்களுடைய விடுதலைக்காக ஏங்கிக்கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை, அழைத்து அதிலிருவரை முழந்தாளிடச் செய்து, தன்னுடைய கையடக்க துப்பாக்கியை எடுத்து, “சுட்டுத்தள்ளி விடுவேன்” என மிரட்டி இருந்தமை, சர்வதேசதத்தின் கவனத்தை வெகுவாக ஈர்த்திருந்தது.

உள்நாட்டில், தமிழ்த் தரப்பினர் மட்டுமன்றி, எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட சமூக ஆர்வலர்களும் அவரது செயற்பாட்டை வன்மையாகக் கண்டித்து, பதவியை துறக்கச் செய்யவேண்டுமென அரசாங்கத்துக்கு ஒரணியில் திரண்டு அழுத்தம் கொடுத்தனர்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத்தொடர் நடந்துகொண்டிருக்கும் இத்தருணத்தில், இராஜாங்க அமைச்சர் லொஹானின் இந்த ஈனத்தனமான செயற்பாடு, அரசாங்கத்துக்கு பெரும் தலையிடியாய் மாறிவிட, பதவியைத் துறக்குமாறு ஜனாதிபதியும் பிரதமரும் கட்டளையிட்டனர்.

அதன்பிரகாரம், தனக்குக்கீழிருக்கும் ஏனைய இராஜாங்க அமைச்சுப்பதவிகளை வைத்துக்கொண்டு, சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சர் பதவியை மட்டுமே இராஜினாமா செய்திருந்தார். இதுவும் கூட ஒரு கண்துடைப்பாகும்.

மனித உரிமைகளை அப்பட்டமாக மீறி, ஒரு குற்றச்செயலைச் செய்திருக்கும் ஒருவரை, அதிகாரத்தில் வைத்திருப்பது பெரும் கேள்விக்குறியாகும். அவ்வாறு எதுவுமே மீறவில்லையெனில் தன்னிலை விளக்கமளித்து இராஜினாமா செய்யாமல் இருந்திருக்கலாம்.

லொஹான் ரத்வத்த, கறைபடிந்த ஒரு ‘நிரபராதி’; அவருக்கு எதிராக, மேல் நீதிமன்றங்களில் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. அவற்றில், லொஹான் ரத்வத்தையை நிரபராதியாக நீதிமன்றங்கள் தீர்ப்பளித்திருந்தன.

2001ஆம் ஆண்டு டிசெம்பர் 5ஆம் திகதி, பொதுத் தேர்தல் தினத்தன்று மடவள, உடதலவின்னவில் 10 முஸ்லிம் இளைஞர்கள், துப்பாக்கியால் சுடப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் குற்றஞ்சாட்டப்பட்டு நிராபராதியாகி இருந்தார்.

1997ஆம் ஆண்டு இடம்பெற்ற, பப்புவா நியூகினியா றக்பி வீரர் ஜோயல் பெரேரா படுகொலை, கண்டி, ஹந்தானையில் டப்ளியு15 பெண்குயிட் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் உள்ளிட்டவை சிலவாகும்.

இவற்றியில் எல்லாம் பிரதிவாதியாக லொஹான் ரத்வத்த பெயர் குறிப்பிடப்பட்டிருந்தார்.

இவ்வாறு கறைபடிந்திருக்கும் ‘நிரபராதி’யின் கைகளில், சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பை ஒப்படைத்தை இட்டு, அரசாங்கம் வெட்கித் தலைகுனிந்திருக்க வேண்டும்; ஆனால், தலைக்குனியச் செய்துவிட்டார்.

தமிழ் அரசியல் கைதிகளை முழந்தாளிடச் செய்து அச்சுறுத்தியமையை எதிர்த்து, ஒரணியில் திரண்ட தமிழ்த் தரப்புகள் உள்ளிட்ட ஏனையோர், ஐ.நாவுக்கும் ஒரணியில் திரண்டிருந்தால், தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்துக்கேனும் பதில் கிடைத்திருக்கும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# சிறிதரனின் ‘குறளி வித்தை’



புருஜோத்தமன் தங்கமயில்

இன்றைய தமிழர் அரசியலில், தமிழரசுக் கட்சிக்குள் இருப்பவர்கள், ‘குறளி வித்தை’ காட்டும் அளவுக்கு, வேறு யாரும் காட்டுவதில்லை.

கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தொடங்கி, அந்தக் கட்சியின் பெரும்பாலான தலைவர்களும், நாளொரு வண்ணமும் பொழுதொரு நடிப்புமாக, வித்தை காட்டிக் கொண்டிருப்பார்கள்.

கடந்த சில நாள்களாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், நடிகர் திலகமாகவே மாறி நின்று அரங்காற்றிக் கொண்டிருந்தார். சிறிதரன், அரசியலுக்கு வந்த கடந்த ஒரு தசாப்த காலத்தில், தன்னையொரு நல்ல நடிகரென்று பலமுறை நிரூபித்திருக்கிறார். ஆனால், கடந்த வாரம் அவர் வெளிப்படுத்திய நடிப்பு, நடிகர் திலகத்தை மீஞ்சும் அளவுக்கானது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடர்களை, அதன் கனதி, நோக்கம் அறிந்து அணுகும் தரப்புகள் தமிழ்த் தேசிய பரப்பில் மிகவும் குறைவு. ஒவ்வொரு கூட்டத் தொடரின் போதும், தாயகத்திலிருந்தும் புலம்பெயர் தேசங்களிலிருந்தும் ஜெனீவாவை நோக்கி பலரும் படையெடுப்பார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள், மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளையோ, ஆளுமை செலுத்தும் மனித உரிமை அமைப்புகளையோ சந்தித்ததில்லை; தமிழ் மக்களின் நீதிக் கோரிக்கைகளுக்கான ஏற்பாடுகளுக்காக முயன்றதும் இல்லை.

மாறாக, பக்க அறைகளில் நடைபெறும் அமர்வுகளில் பார்வையாளர்களாக இருந்து விட்டு, அங்குள்ள உணவகங்களில் சாப்பிட்டுவிட்டு வருவார்கள்; சில வேளை தமிழ் ஊடகங்களுக்கு பேட்டிகளை வழங்குவார்கள். அந்தப் பேட்டிகள், ஏற்கெனவே கேள்வி - பதில் தயாரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது மாதிரியிருக்கும். அவர்களின் அதியுச்ச பங்களிப்பு, அந்தப் பேட்டியாகத்தான் இருக்கும்.

அந்தப் பேட்டியின் பகுதிகளை, தாயகத்திலுள்ள ஊடகங்களும் செய்தியாக வெளியிடும். அதன் மூலம், ஜெனீவாவில் தாங்கள்தான் பெரும் முயற்சிகளை, இலங்கை அரசுக்கு எதிராக மேற்கொண்டது மாதிரியாகக் காட்டிக் கொள்ள முயல்வார்கள்.

அத்தோடு, ஜெனீவா பயணத்துக்காக சுவிஸ் வழங்கிய விசா அனுமதியை வைத்துக் கொண்டு, அங்குள்ள உறவுகள், நண்பர்களைப் பார்த்துவிட்டு வருவதுதான், பலரின் பிரதான நோக்கம். இவ்வாறானவர்களின் பயணத்துக்காக, புலம்பெயர் தரப்புகள் மில்லியன் பெறுமதியில் பணத்தைச் செலவிட்டிருக்கின்றன.

ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளாக, கொவிட்-19 பெருந்தொற்று நெருக்கடிகளால் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் இணைய வெளியில் நடத்தப்படுவதால், ‘நாங்களும் ஜெனீவாவுக்கு செல்கிறோம்’ என்று கடந்த காலத்தில் படம் காட்டியவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை.

மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரை முன்வைத்து, ஊடகங்களில் செய்தியாக முடியவில்லை. குறிப்பாக, மக்களின் மண்டையில் மசாலா அரைக்க முடியவில்லை. அதனால்தான், மனித உரிமைகள் பேரவைக்கு நாங்களும் கடிதங்களை அனுப்புகிறோம் என்கிற பெயரில், ‘குறளி வித்தை’ காட்டியிருக்கிறார்கள்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் சார்பில், பிரதிநிதிகளாகத் தேர்தெடுக்கப்பட்டவர்களுக்கு, குறைந்த பட்சம் ஜெனீவா அமர்வுகளின் கால அட்டவணை, அதன் முக்கியத்துவமாவது தெரிந்திருக்க வேண்டும். இலங்கை விவகாரத்துக்கு எந்தெந்தக் கூட்டத் தொடரில் அதிக கரிசனை வெளிப்படுத்தப்படுகின்றது? இலங்கை மீதான தீர்மானங்களின் படிமுறை என்ன என்றாவது தெரிந்திருக்க வேண்டும்.

ஆனால், இங்குள்ள தமிழ்க் கட்சிகளுக்கும் அதிலுள்ள முக்கியஸ்தர்கள் பலருக்கும், அவ்வாறான எதுவுமே பெரும்பாலும் தெரிவதில்லை. குறிப்பாக, தெரிந்து கொள்ள முயல்வதில்லை. ஏனெனில், அவர்களின் நோக்கம், இங்குள்ள ஊடகங்களில் ஜெனீவா கூட்டத் தொடர்களை முன்வைத்து, தாங்கள் செய்தியாக வேண்டும் என்பது மட்டுந்தான்.

அவ்வாறானதொரு ‘குறளி வித்தை’யைத் தான், தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் மனித உரிமைகள் பேரவை அமர்வுகளை முன்வைத்து, பாராளுமன்ற உறுப்பினர்கள் சிவஞானம் சிறிதரன், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் முன்னெடுத்தனர். தமிழ்த் தேசிய பாராளுமன்ற உறுப்பினர்கள் எனும் கடிதத் தலைப்பில், மனித உரிமைகள் ஆணையாளருக்கான கடிதமொன்றை தயாரித்திருக்கின்றனர்.

அந்தக் கடிதம் அனுப்பப்பட்டதாக, அந்தக் கடிதத்தில் கையெடுத்திட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஊடகம் செய்தி வெளியிட்டிருக்கின்றது. ஆனால், அந்தக் கடிதம் தயாரிக்கப்பட்டது உண்மை. ஆனால் அனுப்பப்படவில்லை என்று சிறிதரன் மறுத்திருக்கின்றார்.

குறித்த கடிதத்தின் பிரதியொன்று, இணைய ஊடகமொன்றில் அண்மையில் வெளியானது. அதிலிருந்து கடிதம் தயாரிக்கப்பட்ட விதம், நோக்கம் என்பன சிரிப்புக்குள்ளாகியுள்ளன. சிறிதரனும் அவரது பரிவாரமும், இவ்வளவுக்கு ‘நக்கல்’ செய்யப்பட்டது இல்லை எனும் அளவுக்கு, நையப்புடைப்புகளைச் சந்தித்து வருகின்றனர்.

கடிதமொன்று என்ன நோக்கத்துக்காக எழுதப்படுகின்றது என்பதை வைத்து, அந்தக் கடிதம் எப்படி எழுத வேண்டும் என்ற வரையறை இருக்கின்றது. உறவுகளுக்கு எழுதப்படும் கடிதம் கொண்டிருக்கும் அம்சங்களை ஒத்த விதத்தில் உத்தியோகபூர்வமாக எழுதப்படும் கடிதங்கள் கொண்டிருக்க முடியாது.

அதனால்தான், பாடசாலை மாணவப் பருவத்தில், கடிதம் எழுதுதல் என்பது ஒரு பிரதான பாடவிதானமாக அநேக நாடுகளில் பேணப்படுகின்றது. அதனை, நீண்ட காலமாக ஆசிரியராகவும் அதிபராகவும் இருந்த சிறிதரன் அறிந்திருக்கவில்லையா என்கிற கேள்வி, அவர் தயாரித்த கடிதத்தைப் பார்க்கும் போது எழுகின்றது.

அத்தோடு, அந்தக் கடிதம் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்துக்கு அனுப்பப்பட தயாரிக்கப்பட்டதாக காட்டப்பட்டாலும், அது இங்குள்ள ஊடகங்களில் கவனத்தைப் பெறுவதற்காக எழுதப்பட்டதை காண முடியும். ‘தமிழ்த் தேசிய பாராளுமன்ற உறுப்பினர்கள் - இலங்கை’ எனும் அர்த்தத்தில் கடிதத்துக்கான தலைப்பையிட சிறிதரன் முயற்சித்திருக்கிறார்.

ஆனால், அவரது அவசரமோ அல்லது மொழிப் பிரச்சினையோ, ‘தமிழ் தேசிய பாராளுமன்ற உறுப்பினர்கள் - இலங்கை’ என்றவாறாக கடிதத்தலைப்பு அமைந்திருக்கின்றது. ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு, ‘பாராளுமன்ற உறுப்பினர்’ என்று எழுதுவதில் என்ன பிரச்சினையென்று தெரியவில்லை. அவர் ஏன், ‘பராளுமன்ற உறுப்பினர்கள்’ என்று எழுதினார் என்பது கேள்வி.

அத்தோடு, அந்தக் கடிதத்தில் கையெழுத்திட்ட சாள்ஸ் நிர்மலநாதன், கலையரசன் ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்களும், ஏனைய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட ஆறு பேரும்கூட கடிதத்தின் தலைப்பை கவனிக்காமலா கையெழுத்திட்டிருக்கிறார்கள்?

கடிதத்தில் தலைப்பையே சரியாக எழுத முடியாதவர்கள், எப்படி கடிதத்தின் உள்ளடக்கத்தில் என்ன இருக்கின்றது என்பதை வாசித்து அறிந்திருப்பார்கள்? இவர்களின் உண்மையாக நோக்கம் என்பது, எவ்வளவு அபத்தமானது.

புலம்பெயர் தேசங்களில் ஐக்கிய நாடுகளுக்கு கடிதம் எழுதுகிறோம் என்று முன் தயாரிக்கப்பட்ட வரைவுகளுடன் பலரும் இருக்கிறார்கள். அவர்களுக்கு தங்களின் ஏவலாளர்களாக இங்கு சிலர் தேவைப்படுகிறார்கள். அப்படியானவர்களின் ஒருதரப்பாக சிறிதரன் தரப்பு செயற்பட முனைந்திருக்கின்றது.


சிறிதரன் தயாரித்த கடிதத்தின் உள்ளடக்கம் தொடர்பில், தமிழரசுக் கட்சியின் இன்னொரு பாராளுமன்ற உறுப்பினரான இரா.சாணக்கியன், தொலைக்காட்சி பேட்டியொன்றில் நையாண்டி செய்திருந்தார். அதாவது, அந்தக் கடிதத்தை பத்தாம் தரத்தில் பயிலும் மாணவன் எழுதும் கடிதத்தோடு ஒப்பிட்டிருந்தார். எந்தவொரு தருணத்திலும் பொறுப்புள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் யாரும், இவ்வாறு சிறுபிள்ளைத்தனங்களைப் புரிய மாட்டார்கள் என்றும் சொன்னார்.

இவற்றையெல்லாம்விட சிறிதரன், குறித்த கடிதம் தொடர்பில் இரண்டு, மூன்று நாள்களாக ஊடகங்களிடம் தொடர்ச்சியாகப் பொய்களையே கூறி வந்தார். தமிழரசுக் கட்சிக்குள் தலைமைக்கு தெரியாமல், ஒரு குழு, மனித உரிமைகள் ஆணையாளருக்கு கடிதம் எழுதியிருக்கின்றது என்ற விவரம் ஊடகங்களில் வெளியானதும், அப்படியொரு கடிதத்தில் கையெழுத்திடவில்லை என்று பாய்ந்தடித்துக் கொண்டு சிறிதரன் அறிவித்தார். அத்தோடு, கடிதத்தில் இருந்த இலத்திரணியல் கையொப்பங்கள் திருடப்பட்டு இருக்கலாம் என்ற கருத்து பலராலும் பகிரப்பட்டது.

பின்னர், தமிழரசுக் கட்சியின் தலைவரும் பேச்சாளரும் நடத்திய ஊடக சந்திப்பில், குறித்த கடிதத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பம் திருடப்பட்டு இடப்பட்டிருந்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதன் பின்னர்தான், இனியும் பொய் புரட்டு நாடகம் ஆடினால் மோசமாக மாட்டிக் கொள்ள வேண்டி வரும் என்று தெரிந்து சிறிதரன், அந்தக் கடிதம் தன்னுடைய ஏற்பாட்டில் தயாரிக்கப்பட்ட விவரத்தை வெளிப்படுத்தினார்.

அப்போது, சிங்கக் கொடியை ஏந்திய சம்பந்தன், பின்னர் தான் சிங்கக் கொடியை ஏந்தவில்லை, காளியின் கொடியையே ஏந்தியதாகபட பொய் சொன்ன போது தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதுபோல, தன்னுடைய பொய் பித்தலாட்டங்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற தோரணையில் பேசிக் கொண்டிருந்தார்.

தமிழ் மக்களின் நீதிக் கோரிக்கை, அரசியல் உரிமைப் பிரச்சினைகளை மறந்துவிட்டு பதவி, பகட்டுக்காக பொய்களாலும் புரட்டுக்களாலும் அரசியல் செய்யும் அரசியல்வாதிகள் பெரும் வியாதிகளே. தமிழ்த் தேசிய பரப்பில் அரசியல் தலைவர்களைக் காட்டிலும் ‘அரசியல் வியாதி’களே கோலொச்சிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் மிகப்பெரும் சோகம்.



## வாழ்வியல் தரிசனம்

தென்றலும் புயலும் காற்றின் வடிவங்கள். தென்றல் இனிமையானது; புயல் ஆக்ரோஷமானது. இதே போல மனிதர்களிலும் வாழ்கின்றார்கள்.

எப்போது மனிதனுக்குக் கோபம் வரும் எனச் சொல்ல முடியாது. தங்கள் குணங்களை, அடிக்கடி மாற்றிக்கொண்டிருப்பது மனித இயல்பு.

இன்பத்திலும் துன்பத்திலும் ஒரே மாதிரியாக இருப்பவர்கள் துறவிகள். ஆனால், சமானியர்கள் எதையும் ஆராயாது, சந்தேகம் கொள்வார்கள். இதனால், மிருகங்களைப் போல் பாய்ந்து, வார்த்தைகளில் விசத்தைக் கக்குவார்கள்.

இதே கோபம், மற்றவர்களுக்கும் வரும் என்பதை, அநேகர் உணர்வதில்லை. ரோசம், கோபம், பழிவாங்கும் உணர்வு போன்றவை தமக்கேயான உரிமை என, சிலர் எண்ணுவது சகஜம்.

மனோபலம் உள்ளவர்கள், தம்மை மறந்து செயற்படமாட்டார்கள். இவர்கள், தமது தவறை எவரும் கண்டுகொள்ளலாகாது; ஆனால், தனக்கான கௌரவத்தைத் தரவேண்டும் என்று எதிர்பார்ப்பார்க்க மாட்டார்கள். ஒழுக்கமற்றவர்களுடன் நியாயம் பேச முடியாது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்



### கிண்ணியா, நடுஊற்று

## மழைநீர் வடிந்தோடும் மதகை திறக்குமாறு கோரிக்கை

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில், நடுஊற்று பிரதான வீதி பகுதியில், மழை நீர் வடிந்து ஓடும் மதகு ஒன்றை, தனிநபர் ஒருவர் மறித்து அடைத்து வைத்துள்ளதாக, பிரதேச மக்கள் புகார் அளிக்கின்றனர்.

இந்த வீதி, நடுஊற்று நாற்சந்தி பிரதான வீதியாகும். இப்பகுதியில் வைத்தியசாலை, பாலர் பாடசாலை, அபிவிருத்தி உத்தியோகத்தர் காரியாலயம், நெசவு நிலையம் என்பன காணப்படுகின்றன.

இது தொடர்பாக, பிரதேச மக்கள், 2021/08/12 திகதி நடுஊற்று அபிவிருத்தி உத்தியோகத்தருக்கும் 2021/08/14 திகதி கிராம உத்தியோகத்தருக்கும் 2021/08/13 திகதியும் 16,17ஆம் திகதியும் கிண்ணியா பிரதேச சபை தவிசாளரிடம் புகார் அளித்துள்ளனர். இது தொடர்பாக, மீண்டும் பிரதேச செயலக கிராம சேவை உத்தியோகத்தரிடம் 2021/09/12 ஆம் திகதியும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், அனைத்து அதிகாரிகளுக்கும் எடுத்துக் கூறியும் இதுவரை தனிநபர் ஒருவர் அடைத்த, மழை நீர் வடிந்தோடும் மதகின் அடைப்பு அகற்றப்படவில்லை. இதுவரைக்கும், மதகை அடைத்த குறித்த நபருக்கு எதிராகவும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

–ஏ.எம்.ஏ. பரீட்

## தமிழ் அரசியல் கைதிகள் இருவரை

# முழந்தாளிட வைத்து அடாவடி

அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மதுபோதையில் கடந்த 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, சென்றிருந்த சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, தமிழ் அரசியல் கைதிகளை அழைத்து, அவர்களில் இருவரை முழந்தாளிட வைத்து, தனது கைத்துப்பாக்கியை எடுத்து, சுட்டுக்கொன்றுவிடுவேன் என மிரட்டியுள்ளார். இச்சம்பவத்துக்கு கடுமையாக கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

# பதவியிலிருந்து நீக்கவும்



சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, தமிழ் அரசியல் கைதிகள் இருவரை முழந்தாளிட வைத்து, தனது தனிப்பட்ட துப்பாக்கியைக் காட்டி, அந்த இடத்திலேயே கொன்றுவிடுவதாக மிரட்டியமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ள யாழ்.மாவட்ட அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அவரை பதவியிலிருந்து நீக்குமாறு வலியுறுத்தியுள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அவர்கள் பல வருடங்களாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். சிலர் தசாப்தத்திற்கும் மேலாக அவர்களுக்கு எதிராக எந்த ஆதாரமும் இல்லாமல், குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படாமல் சிறையில் வாடுகின்றார். அவர்களின் விவகாரங்களைக் கவனிக்க வேண்டிய இராஜாங்க அமைச்சர் அவர்களைக் கொல்வதாக அச்சுறுத்துவது அவர்களின் அதிர்ச்சியை மேலும் மோசமாக்கும்

செப்டெம்பர் 12ஆம் திகதி மாலை, அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற அவர், தமிழ் அரசியல் கைதிகளை வரவழைத்து, அவர்களில் இருவரை அவருக்கு முன் மண்டியிடச் செய்துள்ளார்.

இராஜாங்க அமைச்சரின் இந்த மோசமான நடத்தையை மிகவும் கடுமையான முறையில் கண்டிக்கிறது. தமிழ் அரசியல் கைதிகள் ஏற்கெனவே உலகிற்குத் தெரிந்த மிகக் கடுமையான சட்டங்களில் ஒன்றான பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

# வக்கிர மனது இதுவா?



நாட்டுக்கு பௌத்தம் பற்றி வகுப்பெடுக்கும் அரசாங்கத்தின் வக்கிர மனசு இதுவா? எனக் கேள்வியெழுப்பியுள்ள ஜனநாயக மக்கள் முன்னணி-தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி, “பதிலளிக்க ஜனாதிபதி கடமைப்பட்டுள்ளார்” என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அநுராதபுரம் சிறையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில், தனது டுவிட்டர் பக்கத்தில் இட்டுள்ள பதிவிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இராஜாங்க அமைச்சர் ஒருவர், அநுராதபுரம் சிறைக்குச் சென்று, துப்பாக்கி முனையில், தமிழ் கைதிகளை-முழந்தாளிடச் செய்து, அவமானப்படுத்தி, பயமுறுத்தி உள்ளார். இதுவொரு பாரிய மனித உரிமைமீறல்; மனிதர்களின் ஆத்ம கௌவரத்தை அவமானப்படுத்தும் ஒரு செயல்; ஒரு கிரிமினல் செயல்.

பௌத்தம் பற்றி நாட்டுக்கு தினந்தோறும் வகுப்பெடுக்கும் இந்த அரசாங்கத்தின் மிக வக்கிரமான இனவாத மனசை இது காட்டுகிறதா? ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இதற்கு பதில் கூற வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# அராஜக நிலைக்கு ஓர் எடுத்துக்காட்டு



அநுராதபுரம் சிறைச்சாலையில் அரசாங்கத்தின் இராஜாங்க அமைச்சர் ஒருவர் மேற்கொண்ட நடவடிக்கை இழிவானதும் சட்டவிரோதமானதுமாகும் எனத் தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அச்செயற்பாட்டை வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இவ்வாறான செயலில் ஈடுபட்ட அந்த நபரை, அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கவேண்டும் என்றும் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளார். அநுராதபுரம் சிறைச்சாலைக் கட்டடத் தொகுதியில், அரசாங்க அமைச்சரின் இழிவான மற்றும் சட்டவிரோதமான நடத்தையை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இந்தக் கேவலமான சட்டவிரோத செயல், நமது நாட்டின் அராஜக நிலைக்கு நல்ல எடுத்துக்காட்டாகும். எங்கள் தாய்நாட்டில் வாழும் அனைத்துக் குடிமக்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் இந்த அரசாங்கத்துக்கு கடப்பாடு உள்ளது.

இந்தச் சட்டவிரோதமானதும் கேவலமானதுமான செயல், நமது நாட்டில் மனித உரிமைகளின் நிலைமை, வேகமாகக் குறைந்து வருவதற்கு மற்றுமோர் எடுத்துக்காட்டாகும். இந்த அமைச்சரை, உடனடியாகப் பதவியில் இருந்து நீக்குமாறு, நான் ஜனாதிபதியை கேட்டுக் கொள்கின்றேன் என்றும் தெரிவித்திருந்தார்.

# ஐ.நாவுக்கு நீட்டிய துப்பாக்கி

க. அகரன்



அரசியல் கைதிகளை மண்டியிடச் செய்து, தலையில் துப்பாக்கியை வைத்துக் கொலை அச்சுறுத்தல் விடுத்திருக்கும் செயலானது, தமிழ் மக்களின் அரசியலுக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கும் நேராக நீட்டிய துப்பாக்கியாகும் என, அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா. சத்திவேல் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மாநாடு ஆரம்பித்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், சிறைச்சாலைகளின் இராஜாங்க அமைச்சர், 12ஆம் திகதியன்று, அநுராதபுரம் சிறைச்சாலைக்கு சென்று, அரசியல் கைதிகளை மண்டியிடச் செய்து, தலையில் துப்பாக்கியை வைத்து, கொலை அச்சுறுத்தல் விடுத்திருக்கும் செயலானது, தமிழ் மக்களின் அரசியலுக்கு நேராக நீட்டப்பட்ட துப்பாக்கியாகவும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு நேராக நீட்டிய துப்பாக்கியாகவும் கருதுவதோடு, இத்தகைய அநாகரிகமான செயலை மிகவும் வன்மையாக கண்டிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

# கூட்டமைப்பு கண்டனம்

Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர், அங்கு தமிழ் அரசியல் கைதிகளை அச்சுறுத்தியுள்ளமையை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

அராஜகமான இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்தி, விசாரணையின் பின்னர் அவரைக் கைது செய்யுமாறு வலியுறுத்தியுள்ள த.தே.கூ, அதுவரையிலும் அவரை அப்பதவியிலிருந்து நீக்குமாறும் கோரி, டுவிட்டர் பதிவொன்றை இட்டுள்ளது.

புதுடெல்லி

# தற்கொலைக்கு தூண்டுதல்

## சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பில் விளக்கம்

தென்காசியை அடுத்த சுப்பனூரை சேர்ந்தவர் வெள்ளைத்துரை. இவர் 27 ஆண்டுகளுக்கு முன் திருமலைக்கனி என்பவரை திருமணம் செய்து கொண்டார். கணவன்-மனைவிக்கு இடையே ஏற்பட்ட தகராறு காரணமாக இருவரும் கடந்த 2007ஆம் ஆண்டு மே 7ஆம் திகதி பூச்சிமருந்தை குடித்தனர். அதில் திருமலைக்கனி இறந்துவிட, 4 நாள் சிகிச்சைக்குப்பிறகு வெள்ளைத்துரை உயிர் பிழைத்தார்.

அதையடுத்து திருமலைக்கனியின் சகோதரர், தனது அக்காவை தற்கொலை செய்ய தூண்டியதாக அளித்த புகாரின் பேரில் வெள்ளைத்துரை கைது செய்யப்பட்டார். அவருக்கு எதிரான வழக்கில், தற்கொலைக்கு தூண்டியதற்கு 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையுடன், ரூ.2,500 அபராதமும், பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறைதண்டனை, ரூ.2,500 அபராதமும் விதித்து திருநெல்வேலி செசன்ஸ் கோர்ட்டு 2009ஆம் ஆண்டு தீர்ப்பு அளித்தது.

இந்த தீர்ப்புக்கு எதிராக வெள்ளத்துரை தாக்கல் செய்த மேல்முறையீடு மனுவை விசாரித்த சென்னை ஐகோர்ட்டு மதுரை கிளை, தற்கொலைக்கு தூண்டியதற்கு விடுக்கப்பட்ட 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையை 3 ஆண்டுகளாக குறைத்ததுடன், செசன்ஸ் கோர்ட்டின் தீர்ப்பின் மீதமுள்ள தண்டனையை உறுதி செய்தது.

சென்னை ஐகோர்ட்டு மதுரை கிளை தீர்ப்புக்கு எதிராக வெள்ளைத்துரை சுப்ரீம் கோர்ட்டில் கடந்த 2019ஆம் ஆண்டு மேல்முறையீடு மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் எம்.ஆர்.ஷா தலைமையிலான அமர்வு விசாரித்தது. இந்த வழக்கில் நேற்று கூறிய தீர்ப்பு வருமாறு:

தற்கொலைக்கு காரணமான வெறும் தொல்லை கொடுக்கும் செயல், தற்கொலைக்கு தூண்டுவது ஆகாது என அமலேந்து பால் வழக்கில் சுப்ரீம் கோர்ட்டு ஏற்கனவே தீர்ப்பு கூறியுள்ளது. ஒரு நபரை ஏதாவது செய்ய தூண்டும் செயலே தற்கொலைக்கு தூண்டுவதாகும். குற்றம்சாட்டப்பட்ட நபரின் செயல்களால் அல்லது செயல்படாமல் இருப்பதால் தற்கொலை தவிர வேறுவழியில்லாத நிலைக்கு தள்ளப்படும்போதே தற்கொலைக்கு தூண்டியதாக முடிவுக்குவர முடியம்.

இந்த வழக்கைப் பொறுத்தவரை, சம்பவம் நடந்த நாளில் மனுதாரர் சண்டையிட்டதாக குற்றச்சாட்டப்பட்டது. அது தவிர அவர் தற்கொலைக்கு தூண்டியதாக எவ்வித ஆதாரமும் இல்லை. மேலும் மனுதாரரும் தற்கொலைக்கு முயற்சி செய்துள்ளார். சந்தர்ப்ப சூழல்களை வைத்து பார்க்கும்போது, தற்கொலைக்கு தூண்டியதாக எவ்வித ஆதாரமும் இல்லை. தற்கொலைக்கு தூண்டியதாக செசன்ஸ் கோர்ட்டும், ஐகோர்ட்டும் தண்டனை விதித்து தவறு இழைத்துள்ளன. இதன்படி சென்னை ஐகோர்ட்டு மதுரை கிளை, செசன்ஸ் கோர்ட்டு தீர்ப்புகள் ரத்து செய்யப்படுகின்றன இவ்வாறு தீர்ப்பு வழங்கியுள்ளனர்.

புதுடெல்லி

## 2024 மக்களவைத் தேர்தல்:

# பா.ஜ.கவுக்கு எதிராக தேசிய அளவில் போராட்டம்

## காங்கிரஸ் தீவிர ஆலோசனை



2024ஆம் ஆண்டு நடக்கும் மக்களவைத் தேர்தலுக்கு முன்பாக, மத்தியில் ஆளும் பா.ஜ.க தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசாங்கத்துக்கு எதிராக விலைவாசி உயர்வு, வேலையின்மை உள்ளிட்ட பிரச்சினைகளை முன்னிறுத்தி தேசிய அளவில் போராட்டம் நடத்த காங்கிரஸ் கட்சி திட்டமிட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் போராட்டத்துக்கு முன்பாக, காங்கிரஸ் கட்சியின் தலைவராக ராகுல் காந்தி பொறுப்பேற்க வேண்டும்; அவர் தலைமையில் இந்தப் போராட்டம் நடக்க வேண்டும் என ஆலோசனை தெரிவிக்கப்பட்டு உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி அமைத்த குழுவில் உள்ள மூத்த தலைவர்கள், இந்தப் போராட்டம் குறித்தும், போராட்டத்தில் எந்த மாதிரியான விடயங்களை முன்வைக்கலாம் என்றும் ஆலோசித்துள்ளனர்.

காங்கிரஸ் தலைவர்கள் ரிபுன் போரா, உதித் ராஜ் ஆகியோர் போராட்டத்துக்கு ராகுல் காந்தி தலைமை ஏற்க வேண்டும்; காங்கிரஸ் தலைவராகப் பதவி ஏற்க வேண்டும்; அப்போதுதான் நாடு முழுவதும் நடத்தப்படும் போராட்டம் வெற்றியடையும் என வலியுறுத்தி உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சமூக அமைப்புகள், சிவில் உரிமைக் குழுக்கள் ஆகியவற்றையும் இந்தப் போராட்டத்தில் இணைத்தால்தான் வெற்றியடையச் செய்ய முடியும் என காங்கிரஸ் மூத்த தலைவர் உதித் ராஜ் ஆலோசனை தெரிவித்துள்ளார். விலைவாசி உயர்வு, வேலையின்மை உள்ளிட்ட விவகாரங்கள் போராட்டத்துக்கு முக்கியப் பிரச்சினைகளை எழுப்ப காங்கிரஸ் கட்சி திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பாக டெல்லியில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் ஆலோசனைக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தியும் பங்கேற்றுள்ளார். மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகளால் சிறு, குறு, நடுத்தர தொழில்கள் பாதிக்கப்பட்டதையும் போராட்டத்தில் முக்கிய விவகாரமாக எடுக்க வேண்டும் என பிரியங்கா காந்தி ஆலோசனை தெரிவித்துள்ளார்.

சிவகாசி

# நான்கு வயது குழந்தையை கிணற்றில் தள்ளிக் கொன்ற இரண்டு சிறுவர்கள்



சிவகாசி அருகே உள்ள திருவள்ளுவர் நகரைச் சேர்ந்தவர் பார்த்திபன் (வயது 30). இவருடைய மனைவி கவியரசி. இவர்களுக்கு, பிரியதர்ஷன் (8), தீனதயாளன் (4) ஆகிய 2 மகன்கள் உள்ளனர்.

இந்த நிலையில் பார்த்திபன், தன்னுடைய 2ஆவது மகன் தீனதயாளனை, தனது தாயார் லட்சுமியின் வீட்டில் கொண்டு சென்று விட்டுள்ளார். அந்த சிறுவன் வீட்டின் முன்பு, அதே பகுதியை சேர்ந்த சில சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தான்.

இந்த நிலையில், மாலை 4 மணியாகியும் குழந்தை தீனதயாளனை காணவில்லை. இதனால் அதிர்ச்சி அடைந்த பாட்டி லட்சுமி, தனது மகன் பார்த்திபனுக்கு போன் செய்து, தீனதயாளனைக் காணவில்லை என்று கூறியுள்ளார்.

பின்னர், இதுகுறித்து பொலிஸ் நிலையத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. மாயமான சிறுவன் தீனதயாளனுடன் விளையாடிய அதே பகுதியை சேர்ந்த 13, 11 வயது சிறுவர்கள் இருவரிடம் பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணை நடத்தினர்.

விசாரணையில் அவர்கள், தீனதயாளனை அதே பகுதியில் உள்ள ஒரு கிணற்றில் தள்ளிவிட்டதாகத் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. எனவே பொலிஸார், இரவில் கிணற்றில் தேடினர். போதிய வெளிச்சம் இல்லாததால் தேடும் பணியில் தொய்வு ஏற்பட்டது. மறுநாள், காலை 6 மணி அளவில் தீனதயாளன் உடல் கிணற்றில் மிதந்தது.

இந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி, அந்த 2 சிறுவர்களை கைது செய்தனர். கொலைக்கான காரணத்தை கண்டறிய அந்த சிறுவர்களிடம் பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர்.ப

பொலிஸில் புகார் அளிக்கப்பட்ட போது, பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் துப்புதுலங்கவில்லை. எனவே, அதே பகுதியில் வீட்டில் பொருத்தி இருந்த கண்காணிப்பு கேமராவில் பதிவாகி இருந்த காட்சிகளை பொலிஸார் ஆய்வு செய்தனர். அப்போதுதான், தீனதயாளனை அதே பகுதியை சேர்ந்த 13, 11 வயது சிறுவர்கள் கூட்டிச் சென்றது பதிவாகி இருந்தது.

இதை தொடர்ந்து அவர்களை அழைத்து விசாரித்த போதுதான், அந்த 2 சிறுவர்களும் கிணற்றில் தள்ளி தீனதயாளனை கொலை செய்த அதிர்ச்சி தகவல் அம்பலமானதாக பொலிஸார் தெரிவித்தனர். இருப்பினும் கொலைக்கான காரணம் என்ன? என்பது தொடர்பாக 2 சிறுவர்களிடமும் தொடர்ந்து தீவிர விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

சீனா

# சீனாவில் டெல்டா தாண்டவம்

சீனாவின் புஜியான் மாகாணத்தில் புட்டியான் நகருக்கு அண்மையில், சிங்கப்பூரில் இருந்து நாடு திரும்பிய நபர் ஒருவரால் அந்நாட்டில் மீண்டும் கொரோனாத் தொற்றுப் பரவலானது அதிகரித்து வருகின்றது.

குறித்த நபருக்கு அண்மையில் டெல்டா வைரஸ் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டது.

இந்நிலையில் அவர் மூலம் அவரது பாடசாலை செல்லும் மகன் உட்பட 100க்கும்



அதிகமானோருக்கு தொற்று உறுதியாகியுள்ளதாகவும், அவரது மகன் மூலமாக 36 சிறுவர்களுக்குத் தொற்று பரவியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

சீனாவில் கொரோனாத் தொற்றுப் பரவல் ஏற்பட்டதிலிருந்து பாடசாலைகளில் இந்த அளவுக்குத் தொற்றுப் பரவியது இதுவே முதன்முறை என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

டெல்டா வைரஸானது சிறுவர்களை அதிகமாகப் பாதிப்பதாலும், தற்போது சீனாவில் சடுதியாக டெல்டா பரவல் அதிகரித்து வருவதாலும் புட்டியான் நகரில் உள்ள பாடசாலைகள் அனைத்தும் மீண்டும் மூடப்பட்டுள்ளன.

சீனா

# கோழி இரத்த ஊசி

சீனாவில் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு 'கோழியின் இரத்தம்' கொண்ட ஊசியைச் செலுத்தும் நடவடிக்கை பிரபலமடைந்து வருகின்றது.

தங்களின் பிள்ளைகள் திறன் படைத்தவர்களாக வேண்டும் என ஆசைப்படும் பெற்றோர்களே இவ்வாறு 'சிக்கன் பேரண்டிங்' (chicken parenting) என்ற வினோதமான குழந்தை வளர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இக்குழந்தை வளர்ப்பு முறையின் மூலம் கருவுறாமை, புற்றுநோய், வழுக்கை உள்ளிட்ட பல உடல்நலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என அவர்கள் கருதுவதாகக் கூறப்பட்டுள்ளது.

மேலும், கோழி இரத்தமானது சிறுவர்களின் உடலில் உயர் செயற்றிறனை பன்மடங்கு அதிகரிப்பதாகவும் இதனால் சிறுவர்கள், கல்வி, விளையாட்டு என அனைத்து விடயங்களிலும் அதிக சுறுசுறுப்புடன் செயற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



நைஜீரியா

# சிறையை தகர்த்த பயங்கரவாதிகள்

நைஜீரியாவின் கோகி மாகாணத்தில் கப்பா எனும் நகரில் சிறைச்சாலை ஒன்றுள்ளது. இச் சிறையில் 224 விசாரணைக் கைதிகள் மற்றும் 70 குற்றவாளிகள் என மொத்தம் 294 பேர் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில், கடந்த 12 ஆம் திகதி இரவு குறித்த சிறைச்சாலையின் மீது பயங்கரவாதிகள் கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தியுள்ளதோடு அச்சிறைச்சாலையின் தடுப்புச் சுவரையும் வெடிகுண்டு வைத்து தகர்த்துள்ளனர்.

பின்னர் உள்ளே நுழைந்த பயங்கர வாதிகள் சிறையில் உள்ள அறைக் கதவுகளை உடைத்து கைதிகளைத் தப்ப வைத்துள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதன்போது சுமார் 240 கைதிகள் சிறையிலிருந்து தப்பியோடியுள்ளதாகவும்,

இச்சம்பவத்தில் சிறைக்காவலர்கள் இருவர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் நைஜீரியாவின் இமோ மாகாணத்திலுள்ள ஒரு சிறையில் பயங்கரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தி 1800க்கும் அதிகமான கைதிகளை தப்பவைத்தமை குறிப்பிடத்தக்கது.



இத்தாலி

# வீட்டில் கஞ்சா

இத்தாலியில் கடந்த 2019 ஆம் ஆண்டு சிறிய அளவில் கஞ்சாச் செடிகள் வளர்ப்பதற்கு சட்டபூர்வமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த சட்டத்தில் புதிய திருத்தமொன்று கொண்டு வரப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் அந்நாட்டில் மக்கள் தமது சொந்தத் தேவைக்காக வீட்டிலேயே நான்கு கஞ்சாச் செடிகள் வரை வளர்க்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அந்நாட்டில் கஞ்சாக் கடத்தல் மற்றும் கையாளுதல் ஆகியவற்றுடன் தொடர்புடைய குற்றங்களுக்கான அபராதங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அதற்கு அதிகபட்ச சிறைத் தண்டனையாக 6 முதல் 10 ஆண்டுகள் வரை வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாலிப் பாராளுமன்ற உறுப்பினர் ரிக்கார்டோ மகியால் முன்வைக்கப்பட்ட இந்தத் திருத்தம் காரணமாக, தனிப்பட்ட பயன்பாட்டிற்காக உள்நாட்டுக் கஞ்சாச் சாகுபடியை சட்ட பூர்வமாக்கிய ஐரோப்பாவின் முதல் நாடாக இத்தாலி மாறியுள்ளது.



நோர்வே

பாரம்பரியத் திருவிழாவால்

# 1,400 டொல்பின்கள் பலியெடுப்பு

நோர்வே அருகே வடக்கு அட்லாண்டிக் பெருங்கடலில் உள்ள ஃபேரோ தீவில் பாரம்பரிய வேட்டையாடும் திருவிழாவைக் கொண்டாடிய மக்கள் ஒரே நாளில் 1,400-க்கும் மேற்பட்ட டொல்பின்களைக் கொன்று குவித்த சம்பவம் கடந்த 12 ஆம் திகதி அரங்கேறியுள்ளது.

நூற்றாண்டுப் பழமை வாய்ந்த இப் பாரம்பரியத் திருவிழாவில் 1,428 டொல்பின்கள் மோட்டார்ப் படகுகள் மூலம் கடலில் இருந்து கரைக்கு இழுந்து வரப்பட்டு பின்னர் கழுத்தறுத்துக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் கடல் நீர் சிவப்பு நிறத்தில் காட்சியளித்ததாகக் கூறப்படுகின்றது. இந்நிலையில் அதிகமான டொல்பின்கள் கொல்லப்பட்டமைக்கு சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் பலர் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.



இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டித் தொடரில்

# இலங்கையை வெள்ளையடித்த தென்னாபிரிக்கா

இலங்கையை தென்னாபிரிக்கா வெள்ளையடித்துள்ளது. மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் வென்றிருந்த தென்னாபிரிக்கா, கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற மூன்றாவது போட்டியிலும் வென்றமையைத் தொடர்ந்தே 3-0 என இலங்கையை வெள்ளையடித்தது.



ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

இலங்கை: 120/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: குஷல் பெரேரா 39 (33), சாமிக கருணாரத்ன ஆ.இ 24 (19), தசுன் ஷானக 18 (26), அவிஷ்க பெர்னாண்டோ 12 (08) ஓட்டங்கள். பந்துவீச்சு: பியோன் போர்டெய்ன் 2/21 [4], ககிஸோ றபாடா 2/23 [3], ஏய்டன் மர்க்ரம் [2], கேஷவ் மஹராஜ் 1/14 [4])

தென்னாபிரிக்கா: 121/0 (14.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: குயின்டன் டி கொக் ஆ.இ 59 (46), றீஸா ஹென்ட்றிக்ஸ் ஆ.இ 56 (42) ஓட்டங்கள்)

போட்டியின் நாயகன்: குயின்டன் டி கொக்

தொடரின் நாயகன்: குயின்டன் டி கொக்

# சதுரங்கத்தில் தேர்ச்சி பெற்ற மாணவி கௌரவிப்பு

■ சிவாணி ஸ்ரீ



சதுரங்கத்தில் விசேட தேர்ச்சி பெற்ற மாணவி ஒஷினி குணவர்தன, சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவால் அண்மையில் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

இரத்தினபுரி பேர்குசன் பெண்கள் உயர்நிலை பாடசாலையில் தரம் நான்கில் கல்வி பயிலும் மாணவி ஒஷினி குணவர்தன நிகழ்நிலை ஊடாக நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் ரஷ்யாவுக்கு எதிரான அரையிறுதிப் போட்டியிலும், ஐக்கிய அமெரிக்காவுக்கு எதிரான இறுதிப் போட்டியிலும் வெற்றி பெற்றுள்ளார்.

இவரைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வானது, சப்ரகமுவ மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றபோது மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ மாணவிக்கு மடிக்கணணியை வழங்கி கௌரவித்தார்.

இதன்போது நிவித்திகலை பிரதேச சபை தலைவர் குலதுங்க லியனகே, மாகாண ஆளுநரின் இணைப்புச் செயாளர் மஞ்சுலா இதிகாவெல, இரத்தினபுரி பேர்குசன் பெண்கள் உயர்நிலை பாடசாலையின் உப அதிபர் கிதானி அதுகோரால உட்பட அதிகாரிகளும் கலந்த கொண்டனர்.





# விடைபெற்றார் மலிங்க

அனைத்து வகையான போட்டிகளிலிருந்தும் இலங்கையணியின் முன்னாள் தலைவரான லசித் மலிங்க ஓய்வு பெற்றுள்ளார்.

ஏற்கெனவே டெஸ்ட் மற்றும் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றிருந்த 38 வயதான மலிங்க, இருபதுக்கு - 20 போட்டிகளிலிருந்தும் தற்போது ஓய்வு பெறுவதாக அறிவித்ததைத் தொடர்ந்தே அனைத்து வகையான போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெற்றுள்ளார்.

இறுதியாக கடந்தாண்டு மார்ச் மாதம் விளையாடியிருந்த மலிங்க, சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத்துக்கான இலங்கைக் குழாமில் தேர்வு செய்யப்படாமையைத் தொடர்ந்தே இருபதுக்கு - 20 போட்டிகளிலிருந்து ஓய்வை அறிவித்துள்ளார்.

84 இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளில் விளையாடிய மலிங்க 107 விக்கெட்டுகளைக் கைப்பற்றி, இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளைக் கைப்பற்றியவராகக் காணப்படுகின்றார்.

இதேவேளை, இருபதுக்கு - 20 போட்டிகளின் சிறந்த பந்துவீச்சாளராகக் கருதப்படும் மலிங்க, 295 போட்டிகளில் 390 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார்.

# கந்தளாய் மத்திய கல்லூரி மைதானம் புனரமைப்பு

■ எப். முபாரக்

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச மற்றும் கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு இராஜங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் கந்தளாய் சிங்கள மத்திய மகா வித்தியாலய விளையாட்டு மைதானம் புனரமைக்கப்படவுள்ளன.

சுமார் 35 இலட்சம் ரூபாய் செலவில் இவ்விளையாட்டு மைதானம் புனரமைப்பு பணிகள் நடைபெறவுள்ளன.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஐந்து வலயக்கல்வி அலுவலகங்களிலுள்ள ஐந்து விளையாட்டு மைதானங்கள் இவ்வாறு புனரமைக்கப்படவுள்ளன.

கந்தளாய் மத்திய கல்லூரியின் விளையாட்டு மைதானத்தின் பணிகளை திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்,அபிவிருத்திக் குழுவின் தலைவருமான கபில அத்துக்கோரலவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது கந்தளாய் பிரதேச சபையின் தவிசாளர், கந்தளாய் வலயக்கல்விப் பணிப்பாளர் மற்றும் விளையாட்டுப் பணிப்பாளர் உட்பட பாடசாலை அதிபர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் வியாழக்கிழமை, 16 செப்டெம்பர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.